Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 16 ஞாயிற்றுக்கிழமை (02.11.2014) பக்கங்கள் 20 ஓசை - 033

# மக்கள் நலன்சார் திட்டங்களை செயற்படுத்த மறுக்கும் வடமாகாணசபை

## சந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



ஒரு நாட்டின் வரவு செலவுத்திட்டமானது, முழு நாட்டின் நலனையும் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கும். அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளையும் அவர்களுடைய உணர்வுகளையும் கொண்டிருப்பது அவசியமானதாகும். அந்த வகையில் போரினால் பாதிக்கப்பட்டோர், பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்பன விசேட கவனத்திற் கொள்ளப்பட்டு, கடந்த ஐந்தாண்டுகால வரவு செலவுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இதனால்தான், நாம் அவற்றை ஆதரித்தோம். கடந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வட மாகாண சபைக்கான நிதி ஒதுக்கீடானது சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில், ஒதுக்கப்படவேண்டிய தொகையைவிட அதிகமாகவே இருந்தது.

இதற்கு காரணம், வட மாகாணத்தில் இடம்பெற்ற போரின் பாதிப்புகளாகும் எனினும் இவ்வாறு அரசினால் ஒதுக்கப்பட்ட நிதியை மக்களின் நலன்சார் விடயங்களுக்கு பயன்படுத்தாமல் வடமாகாணசபை புறமொதுக்கி வைத்துள்ளது. என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் ஆலோசகராக கிறிஸ்நோனிஸ் நியமனம்?

பிரித்தானியாவிற்கான இலங்கையின் முன்னாள் உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனிஸ் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட உள்ளதாக தேசிய வார இதழ் தெரிவித்துள்ளது.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற விருந்துபசாரத்தின் போது வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தாக்கியதாக கிறிஸ் நோனிஸ் தெரிவித்திருந்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## – புலித்தடை நீக்க வழக்கு –

## ஐரோ. ஒன்றிய நீதிமன்றின் முன் மண்டியிடமாட்டாது இலங்கை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் புலித்தடை நீக்கம் தொடர்பான வழக்கில் எம்மை ஒரு தரப்பாக சேர்க்குமாறு கேட்கமாட்டோம். அவ்வாறு கோரினால் ஐரோப்பிய நீதிமன்றத்தின் முன்பாக இலங்கை அடிமைப்படும் நிலை ஏற்பட்டுவிடும்என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற வழக்கில் இலங்கை பிரதிவாதியல்ல. ஏனைய 28 நாடுகள் தான் பிரதிவாதிகளாக உள்ளன. புலிகள்தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

எனவே, இந்த வழக்கில் இலங்கையும் ஒரு பிரதிவாதியாக இணையவேண்டிவரும். அதற்காக நாம் ஒரு கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சிறுபான்மையினரின் அதிகாரங்களை பறிக்க முயலும் அத்துரலிய தேரர்

### மங்கள எம்.பி.கவலை

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் முன்வைத்துள்ள யோசனையானது சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள சிறிய அதிகாரங்களை கூட பறித்துக் கொள்ளும் யோசனைகள் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு

(19) ஆம் பக்கம் பார்க்க

## மேலதிக வாக்குகளால் நிறைவேறியது பட்ஜட்

2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 100 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 5 மணியளவில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இந்த வாக்கெடுப்பில் 24 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 157

(19) ஆம் பக்கம் பார்க்க

## மண்ணுள் புதையும் ஆபத்தில் இலங்கையின் பெரும் நிலப்பகுதி

இலங்கையின் மொத்த நிலப் பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு மண்சரிவு மற்றும் மண்ணுக்குள் புதையுண்டு போகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக தேசிய கட்டுமாண ஆய்வு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் நிலப்பரப்பில் சுமார் 12122 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு இவ்வாறு மண்சரிவு மற்றும் மண்ணுள் புதையுண்டு போகும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது.

குறிப்பாக கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களே இவ்வாறு ஆபத்தை

(19) ஆம் பக்கம் பார்க்க

## போதைப் பொருள் கடத்தல் இலங்கையரும் இந்திய சிறைகளில்

போதைப் பொருள் கடத்தல் வழக்குகளில் இலங்கையைச் சேர்ந்த 43 பேர் இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 பேர் தமிழக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்திய தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கு அண்மையில் இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பாப்பரசரின் வருகையை பிற்போடுமாறு அழுத்தமா?

### மறுக்கிறது கத்தோலிக்கசபை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரிமாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ள பாப்பரசர் பிரான்ஸிஸ்ஸின் வருகையை பிற்போடுமாறு அரசாங்கத்திடமிருந்து எவ்வித அழுத்தமும் கிடைக்கவில்லையென இலங்கை கத்தோலிக்க சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கத்தோலிக்க சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே பாப்பரசரின் விஜயத்தின் போது தேர்தல்கள் இடம்பெறுமானால் அது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு விடக்கூடும் என்ற கோரிக்கை அரசாங்கத்திடம் விடுக்கப்பட்டுள்ளது.

பாப்பரசரின் விஜயத்துக்கு முன்னால் தேர்தல் நடக்குமானால் அது அவரின் விஜயத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. எனவே பாப்பரசரின் விஜயத்துக்கும் தேர்தலுக்கும் இடையி

(19) ஆம் பக்கம் பார்க்க




விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?



இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
## 30 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம்
### நவம்பர் 10 ஆம், 11 ஆம் திகதி 2014

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 30 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் நவம்பர் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நடைபெறும். பட்டமளிப்பு நிகழ்வானது பின்வரும் அமர்வுகளை உள்ளடக்கியதாக அமையும்.

| திகதி | அமர்வு 1 (மு.ப.9.00) | அமர்வு 2 (மு.ப.10.45) | அமர்வு 3 (பி.ப.02.00) | அமர்வு 4 (மு.ப.03.30) |
|---|---|---|---|---|
| 10.11.2014 | Mphil (Biochemistry)<br>Mphil (Nursing)<br>MBBS<br>Bsc in Nursing<br>Bsc in MLS<br>Bsc.in Pharmacy<br>LLB<br>Bsc in Agriculture | Mphil (Geography)<br>BFA<br>BA (General) | PhD (Management)<br>Mphil (Tamil)<br>BAd<br>BA (General) | Msc (environment)<br>PGD in Env. Mag<br>Bsc (Com.Sc)<br>BCS<br>BA(General) |
| திகதி | அமர்வு 5 (மு.ப.9.00) | அமர்வு 6 (மு.ப.10.45) | அமர்வு 7 (பி.ப.02.00) | அமர்வு 8 (மு.ப.03.30) |
| 11.11.2014 | BBM (General & Special), Bsc in Applied Mathematics & Computing, BICT<br>BSc in ICT<br>BSc in Environmental Science<br>PGDE (Vavuniya Centre)<br>BSMS (Sidha) | Mphil (Christianity) BA (Special) | Mphil (Geography)<br>BA (Special) | Mphil (Education)<br>PGDE (Jaffna centre) |

முக்கிய குறிப்பு- கலைப்பீட பட்டதாரிகள் தங்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அமர்வுகளின் விபரங்களை **www.jfn.ac.lk** என்ற இணையத்தளத்திலும் கலைப்பீட அலுவலகத்திலும் பார்வையிட முடியும்.

மேலதிக விபரங்களுக்கு உதவிப்பதிவாளர்/கல்விக்கிளை, தொலைபேசி இலக்கம் 021 222 6500 என்ற இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம.

பதிவாளர் (C/3585)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
## 30 ஆவது பட்டமளிப்பு வைபவம்
### பட்ட மேலங்கிகள் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 30 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் நவம்பர் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பங்குபற்றும் பட்டதாரிகளுக்கான பட்டமேலங்கிகளை 04.11.2014 ஆம் திகதியிலிருந்து கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

* பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை
* உயர்கல்வி அமைச்சின் கேள்விக் கொத்தினைக் கீழுள்ள அலுவலகங்களில் பெற்று அல்லது WWW.Jfn.ac.lk என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து பூரணப்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
* புகைப்படம் மற்றும் DVD யினைப் பெறுவதற்கு ரூபா 250/= இனை மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளையில் (கணக்கு இலக்கம் 162100160000880) வைப்புச் செய்த பற்றுச் சீட்டு.

| | | |
|---|---|---|
| 01 | கலைப்பீடப் பட்டதாரிகள்<br>*சட்டமாணி, இராமநாதன் நுண் கலை அலகுப் பட்டதாரிகள்-04.11.2014<br>* சிறப்புக் கலைமாணி-05.11.2014, 06.11.2014<br>* பொதுக்கலைமாணி-07.11.2014 | கலைப்பீடாதிபதி அலுவலகம் |
| 02 | மருத்துவபீட பட்டதாரிகள் மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டதாரிகள் | மருத்துவபீடாதிபதி அலுவலகம் |
| 03 | விவசாயபீட பட்டதாரிகள் | விவசாயபீடாதிபதி அலுவலகம் திருநெல்வேலி |
| 04 | முகாமைத்துவபீடப் பட்டதாரிகள் | முகாமைத்துவபீடாதிபதி அலுவலகம் |
| 05 | விஞ்ஞானபீட பட்டதாரிகள் | விஞ்ஞானபீடாதிபதி அலுவலகம் |
| 06 | சித்த மருத்துவ அலகு பட்டதாரிகள் | சித்த மருத்துவ அலகு அலுவலகம், கைதடி |
| 07 | பட்டமேற்படிப்பு பட்டதாரிகள் | உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி அலுவலகம் |
| 08 | வவுனியா வளாக பட்டதாரிகள் | வவுனியா வளாக முதல்வர் அலுவலகம் |

குறிப்பு-கேள்விக் கொத்தினை முறையாகப் பூரணப்படுத்தி சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே பட்ட மேலங்கி வழங்கப்படும்

(C/3586) பதிவாளர்.


# நாய்க்கடிக்கு இலக்காவோர் தொகை
# குடாநாட்டில் தொடர்ந்து அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்போது நாய்க்கடிக்கு இலக்காவோரின் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் போதனா வைத்தியசாலையின் விலங்கு விசர் நோய் சிகிச்சை நிலையத்திற்கு சிகிச்சை பெறவருபவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் 40 முதல் 50 பேர் வரை அங்கு சிகிச்சை பெறுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது இதில் புதிதாக நாய்க்கடிக்கு இலக்கானவர்களும் ஏற்கனவே நாய்க்கடிக்கு இலக்காகி கிளினிக் சிகிச்சை பெறுபவர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கமே இவ்வாறு நாய்க்கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரிக்க காரணம் என்று தெரிவித்த விலங்கு நோய்ச்சிகிச்சை நிலைய அதிகாரி கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுததுவதற்கான சாத்தியமான நடவடிக்கை ஒன்று அவசியம் என்றும் தெரிவித்தார்.

(பா)

# கால்நடை வளர்ப்போருக்கு விவசாய சம்மேளனம் அறிவுறுத்து

வாதரவத்தைப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கால் நடைகளை கட்டி வளர்க்குமாறு வாதரவத்தை விவசாய சம்மேளனத்தின் தலைவர் க.சுந்தரவேல் தெரிவித்துள்ளார்.

கட்டாக் காலியாகத் திரியும் கால்நடைகள் பயிர்களை பெருஞ்சேதமாக்குவதால் நெற் செய்கையாளர்கள் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிவரும் எனவே இதனால் கால்நடைகளை வளர்ப்போர் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (08)

# யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு

யாழ்யோகா அரங்கத்தினர் நடாத்தும் யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர்த்தேரடி அருகே அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யோகா போதனாசிரியர் எஸ்.உமாசுதன் “யோகா ஓர் அறிமுகம்” என்னும் விடயம் பற்றியும் சுதேசமருத்துவர் க.சோதிதாசன் “சுதேச மருத்துவத்தில் யோகா” என்னும் தொனிப்பொருளிலும் கருத்துரை வழங்குவர். யோகா வகுப்புக்கள் காலை 6.00மணி தொடக்கம் காலை 7.00 மணிவரை ஒருமணி நேரம் இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும். ஆரோக்கியத்திற்கு மிக அவசியமானவை என்று வைத்தியர்களாலும் யோகா நிபுணர்களாலும் இனங்காணப்பட்டசூரிய நமஸ்காரம், யோகாசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்தவழி முறைப் பயிற்சிகள் பதஞ்சலியோகா முறையில் அனுபவமுள்ள ஆசிரியர்களால் நுட்பமாக பயிற்றுவிக்கப்படுவதுடன் கையேடுகளும் யோகாசன செயனமுறைப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் மாலைநேர யோகா பயிற்சிக்கான பதிவுகளும் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயன்பெற முடியும் என்று யாழ்.யோகா அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# நல்லை ஆதீனத்தில் பிரார்த்தனை நிகழ்வு

நல்லை திருஞான சம்பந்தர் ஆதினமும் சின்மயா மிஷனும் இணைந்து மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பிரார்த்தனை நிகழ்வு ஒன்றை இன்று நிகழ்த்தவுள்ளனர்.

மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களின் நலனுக்காகவும் இறந்தவர்களின் ஆத்மாசாந்திக்காகவும் பிரார்த்திக்கும் வகையில் இன்று மாலை 5 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் பிரார்த்தனை நிகழ்வு நடைபெறவுள்ளது.

அனைத்து இந்து அமைப்புக்களையும் இப் பிரார்த்தனையில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 304
திகதி - 2014.10.31

வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து

**11 13 49 65 D**

பரிசுத் தொகை ரூபா. **16,461,760/-** வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 10 | 250,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 185 | 185,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 338 | 338,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8622 | 517,320/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4591 | 183,640/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 111890 | 2,237,800/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16264 | 325,280/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 16,461,760/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,037,040/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 16,681,060/-

2014.11.04ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே. 011 2333546/47
web www.dlb.lk

(C/3536)

# ஓமந்தைப் பிரதேசத்தில் உழவர் சந்தை திறந்துவைப்பு



(வவுனியா)

வவுனியா ஓமந்தை பிரதேசத்தில் உழவர் சந்தை ஒன்று நேற்று முன் தினம் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிசாட் பதியுதீனால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக் கப்பட்டது.

வவுனியா தமிழ் பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்ட இச்சந்தை கட்டட தொகுதிக்கு தமிழ் பிரதேச சபையால் விவசாயிகளிடமிருந்து அதிகூடிய வாடகை கோரப்பட்டதால் இச்சந்தைக் கட்டடம் மூன்று வருடங்களுக்கு மேல் பயனற்று இருந்ததை காணமுடிந்தது

தற்போது வவுனியா மாவட்ட கமக்கார அமைப்பு இச்சந்தை கட்டட தொகுதியை பொறுப்பெடுத்து நடைமுறைப்படுத்துகின்றது. இங்கு விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களை இடைத்தரகர்களுக்கு தாமே விற்பனை செய்யமுடியுமென வவுனியா மாவட்ட கமக்கார அமைப்பு தெரிவித்துள்ளது

இந்நிகழ்வில் வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் வவுனியா பணிப்பாளர் எம்.அனுரா, மாகாணசபை உறுப்பினர் ஜெயதிலக ஆளுநரின் ஆணையாளர் எச்.எம்.மொஹிதின், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர்மாவட்ட விவசாயப்பணிப்பாளர், வவுனியா மாவட்ட கமக்கார அமைப்பு தலைவர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (70)

## வேகக்கட்டுப்பாட்டை மீறும் மோட்டார் சைக்கிளோட்டிகள்

வரணிப்பிரதேசத்தில் உள்ளக வீதிகளில் மோட்டார்சைக்கிள்களில் செல்வோர் தலைக்கவசம் அணியாது வேகக் கட்டுப்பாட்டை மீறும் வகையில் செல்வதால் பொதுமக்கள், சிறுவர்கள் மிகவும் அச்சமடைந்த நிலையில் உள்ளனர்.

இவர்களிடம் இதுபற்றி தட்டிக்கேட்டால் தேவையற்ற விபரீத ஏற்படும் என மக்கள் மௌனிகளாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. (150)

## E-8 கிளையில் நிவாரணம் மகிழ்ச்சியில் வடவரணி மக்கள்

(வரணி)

வடவரணி பிரதேசத்தில் பொதுமக்களுக்கு காசுக்கான நிவாரணம் தற்போது பல.நோ.கூட்டுறவுச்சங்க E-8 கிளையில் வைத்து வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் மக்களுக்கான நிவாரணம் சுமார் ஒருமைல் தூரத்திலுள்ள வரணி சந்தைக்கருகே E9 கிளையில் வழங்கப்பட்டு வந்தது. இதனால் மக்கள் நிவாரணத்தை பெற நீண்டதூரம் செல்ல வேண்டியிருந்ததுடன் மிக கஷ்டத்தின் மத்தியில் அவற்றை பெற்றும்வந்தனர்.

தற்போது E8 கிளையில் நிவாரணம் வழங்கப்பட்டுவருவதுடன் தற்போது உலக உணவு திட்டத்தினால் நலிவுற்ற குடும்பங்களுக்கான இலவச நிவாரணமும் வழங்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நடவடிக்கையால் ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் 40 பயனாளிகள் நன்மையடைந்துள்ளதாக தெரிவிக்கும் மக்கள் முன்னர் தாம் எதிர்நோக்கிய பிரச்சினையை தினமுரசில் சுட்டிக்காட்டியதால் தற்போது சிரமமற்ற வகையில் நிவாரணத்தை பெறுவதற்கு உதவியாக உள்ளது என தினமுரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (150)




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் செயற்றிட்டங்களின் தொடர்ச்சியாக கழகத்திற்கு வருகை தந்த லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1 இன் வலயத் தலைவர் லயன் கரிகரனால் கணவனை இழந்த விதவைக்கு தென்னம் நாற்றுகள் வழங்கப்பட்டபோது...

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் -22




இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் உள்ள சிக்கல்களில் மொழி ஒரு முக்கியமான இடத்தில இருக்கு.

ஒரு சிக்கலான விசயத்தைக் கூட நாங்கள் எளிமையாகச் சொல்லி அதை விளங்க வைக்கலாம்.

சிலவேளை கடினமான ஒரு பிரச்சினையை சொல்லுகிற முறையால் அல்லது கேட்கிற விதத்தால வலு சாதாரணமான ஒண்டாக்கிப் போடலாம்.

எந்தப் பெரிய எதிரியையும் நண்பனாக்கலாம். ஆயுள் நண்பனையே எதிரியாக்கவும் முடியும். முற்றிலும் அந்நியர் ஒருவரை இனியில்லை எண்ட அளவில உற்ற நண்பராக்கலாம். பெற்றதாயைக் கூட மொழி எதிரியாக்கிவிடும்.

மொழி அப்படி பல நன்மைகளைச் செய்ய வல்லது. அதேயளவுக்குப் பெரிய தீமைகளையும் செய்து விட்டுப்போகும்.

இலங்கை இனப்பிரச்சினையிலயும் மொழி ஒரு பெரிய பிரச்சினையான விசயமாகவே இருக்கு.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த பிரான்ஸைச் சேர்ந்த படைப்பாளி ஒருவர் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த மொழி உருவாக்குகிற உளவியல் மற்றும் பண்பாட்டுப் பிரச்சினையைப் பற்றியும் மொழி அரசியலைப் பற்றியும் சொன்னது கவனத்துக்குரியது.

நாங்கள் விபச்சாரி எண்டு சொல்லுகிற போது எங்களுடைய மனசில எழுகிற உணர்வும் அந்தப் பெண்ணைப் பற்றிய பிம்பமும் மிகவும் கீழான ஒரு பெண் எண்ட வகையிலேயே அமைகிறது. ஆனால், இதை நாம் பாலியல் தொழிலாளி எண்டு குறிப்பிடும்போது அந்தப் பெண் அந்தத் தொழிலைச் செய்யும் ஒரு தொழிலாளி என்றோ ஒரு சட்டபூர்வமான உரிமையும் சமூக அந்தஸ்தும் உடையவர் எண்டு உணர்கிறம்.

இப்பிடித்தான் உடல் உறுப்புகளில் ஏற்பட்ட பாதிப்பின் காரணமாக குறைபாடுள்ளவர்களை நாங்கள் செவிடு, குருடு, சொத்தி எண்டு சொல்லிறதுக்குப் பதிலாக, மாற்றுத்திறனாளிகள் எண்டு சொல்லும்பொழுது இவர்களைப் பற்றிய, இவர்களுடைய திறன்களைப் பற்றிய ஒரு மாறுபட்ட நல்ல புரிதல் ஏற்படுகிறது அல்லவா!

இதைப்போலத்தான் ஆண்களும் அல்லாத பெண்களும் அல்லாதவர்களை நாங்கள் திருநங்கைகள் எண்டோ மூன்றாம் பாலினர் எண்டோ சொல்லுகிற போது அவர்களைப் பற்றிய புரிதல் வேறாக – உயர்வாக ஏற்படுகிறது.

இதைப்போல நாங்கள் எங்கள் மனதுக்குள் மொழிரீதியாக சில பழமங்களை தவறாக உருவாக்கி வைத்திருக்கிறோம். அல்லது மற்றவர்களுக்கு அது அச்சத்தை உண்டாக்குகிற விதமாக உள்ளது.

அந்த வகையில் தமிழ்த்தேசியம், வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம், தமிழீழம் எண்டெல்லாம் இண்டைக்குப் புழக்கத்தில இருக்கிற சொற்கள் இலங்கையில இருக்கிற ஏனைய சமூகங்களிட்டப் பெரிய கலக்கத்தை உண்டாக்கியிருக்கு.

ஜே.வி.பி, சிஹல உறுமய, பௌத்த மகா சங்கம் எண்டதெல்லாம் தமிழ் முஸ்லிம் மக்களிட்ட எப்பிடியான ஒரு எதிர்மறையான தாக்கத்தை உண்டாக்கியிருக்கோ அப்பிடித்தான் இதுவும்.

அமெரிக்கர்களுக்கு எப்பிடித் தலிபான் எண்ட பேர் பிழையான ஒரு அடையாளமாக உள்ளதோ அப்பிடித்தான் தமிழரசு எண்டதைச் சிங்களவர்களும் முஸ்லிம்களும் பார்க்கினம்.

அதிகம் ஏன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எண்டாலே இண்டைக்குத் தமிழரசுக் கட்சிக்காரருக்கு அச்சமாக – பிடிக்காமல் இருக்கிறமாதிரி...

இதைப்போல தமிழரசுக்கட்சி எண்டாலே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில இருக்கிற ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் கட்சிக்காரருக்கு பிடிக்காமலிருக்கு.

ஆகவே இப்பிடியான ஒரு நிலைமையில இனப்பிரச்சினையை விசுவாசமாகவே நாங்கள் தீர்க்கப்போறம் எண்டால் அதுக்கு நாங்கள் பயன்படுத்துகிற மொழியையும் – சொற்களையும் தேர்வு செய்யவேணும்.

அப்பிடியெண்டால்தான் முதற்கட்டத் தடைகளைத் தாண்ட முடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினையே மொழியை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரச்சினைதானே.

ஆகவே மொழியை நாங்கள் கவனமாகக் கையாளவேண்டியுள்ளது. எதிர்ப்பு, அச்சம், பகை போன்றவற்றை உருவாக்காத – கூர் இல்லாத – சினேகமான மொழியை உருவாக்க வேண்டும்.

தமிழ் உயர் குழாத்தினரும் சிங்கள உயர் குழாத்தினரும் தங்கள் தங்கள் நன்மைகளுக்காக எதிரிகளாக நடிச்சுக் கொண்டிருக்கினம்.

ஆனால், உண்மையில் இவை ஒருபோதுமே எதிரிகள் இல்லை. ஆளுக்கு ஆள் தரப்புக்குத் தரப்பு உள்ளோட்டத்தில் ஒற்றுமையாக இருந்து கொண்டு வெளியே சனங்களுக்குப் பகைமாதிரிக் காட்டிக்கொள்ளுகினம்.

இந்த எதிர் எதிர் விளையாட்டுத்தான் இவையின்ரை அரசியல் மூலதனம்.

இவையைத் தமிழாக்கள் தெரிவு செய்யினம் எண்டால், அங்க அவையை சிங்களச்சனம் தெரிவு செய்யினம். இது, தலைவர்களான அவைக்கு வெற்றியாயும், மக்களாகிய எங்களுக்குத் தோல்வியாயும் தொடருது.

வெற்றி நமது தவறுகளை மூடி மறைத்துவிடும். - பார்பர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811. thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அகிம்சைப் போருக்குத் தயாராதல்...

மாவையார் தலைமையிலான தமிழரசுக் கட்சி அரசாங்கத்திற்கு தீர்வை வைப்பதற்காக கொடுத்த மூன்று மாத காலக்கெடுவில் ஒரு மாதம் ஓடிவிட்டது. அகிம்சைப்போரை ஆரம்பிக்க இன்னும் இரண்டே மாதங்கள்தான்.

அரசோ அப்படி ஒரு காத்திரமான எச்சரிக்கை தமிழரசுக் கட்சித் தரப்பிலிருந்து விடுக்கப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டதாகவே காட்டிக்கொள்ளாமல் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அலுவல்களில் மும்முர கவனத்தைச் செலுத்துகிறது.

"இதற்குமேலும் பொறுக்க முடியாது; இனி அரசை ஆட்டி விழுத்தி விட்டுத்தான் மறுவேலை" என்பதாக இவர்கள் பலகாலமாக அவ்வப்போது விடுத்துவரும் தீவிரமான பயமுறுத்தல்களைக் கூட, அரசு, ஏதோ வடிவேலு ஜெயிலுக்குப் போவதாகச் சொல்வதைக் கேட்பதுபோலவே கேட்டுவிட்டுத் தன் அலுவலைக் கவனித்து வருகிறது.

ஆனால், காலக்கெடு முடியும் நாள் நெருங்கி வந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், மாவையண்ணையின் அகிம்சைப் போர் முழக்கங்களும் அதிகமாக வரப்போகிறது என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்குத்தான் சற்று ஏமாற்றமாக இருக்கிறது.

அண்ணை எங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றே தெரியவில்லை. தமிழரசுக் கட்சியின் வவுனியா மாநாடு முடிந்தகையோடு நாலைந்து தடவைகள் "தீர்வு கிட்டும் வரையான அகிம்சைப்போர் வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் வெடித்தே தீரும்" என்று நம் காதுகுளிர முழங்கிய அண்ணன் பிறகு எந்த சத்தமும் இல்லாமல் விட்டுவிட்டது என்னவோ போல் இருக்கிறது.

ஜனவரியிலிருந்து தொடர்ச்சியாக உண்ணாவிரதமிருக்கப் போகும் தமிழரசுக் கட்சித் தலைவர்களின் பெயர்ப்பட்டியலை வரிசைப்படுத்துவதில் அவர் 'சைலண்டாக' வேலைசெய்து கொண்டிருக்கக் கூடும்.

ஒத்துழையாமை இயக்க வகையில் உத்தியோகங்களைத் துறந்து அரசுக்குத் தொடர்ச்சியான நெருக்கடியைக் கொடுக்கப் போகும் அரச உத்தியோகத்தர்களைத் தயார்ப்படுத்துவதில் அவர் மும்முரமாயிருக்கக் கூடும்.

மிகப் பெரும்பான்மையான தமிழ் அரச உத்தியோகத்தர்களும் மாவையண்ணை கேட்டுக்கொண்டால் தமிழ்ப் பிரச்சினைத் தீர்வுக்காகக் களத்தில் இறங்கக் கூடியவர்கள்தான் என்பது கடந்த சில தேர்தல்கள் மூலம் வெளிப்படையான விஷயம்.

தமிழரசுக் கட்சித் தலைவர் உறுதியாகத் தெரிவித்திருப்பதைப் போல, தீர்வு கிட்டும் வரைக்குமான தொடர்ச்சியான அகிம்சைப் போராட்டத்திற்காகத் தலைவர்கள் கொஞ்சமேனும் தங்களை வருத்தப்படுத்திக்கொள்ள இறங்கிவிட்டால், தமிழ் மக்கள் முழு ஒத்துழைப்புத் தந்து அவர்கள் பின்னால் இறங்குவர் என்பதில் ஐயமில்லை.

இதற்கு முந்திய உண்ணாவிரதப் போராட்டங்களுக்கும் பஸ் நிலைய ஆர்ப்பாட்டங்களுக்கும் வேடிக்கை பார்க்க வந்துநின்றவர்களைத் தவிர செயற்பாட்டுக் களத்தில் இருந்தவர்கள் இருபது முப்பது பேர்களுக்குள்தான் இருந்தார்கள் என்பது குறித்து இப்போது மனச்சோர்வு அடையத் தேவையில்லை.

அது அதிகபட்சமாக நாலைந்து மணித்தியாலத்திற்குள் முடிக்கவென்றே நடத்தப்பட்ட குட்டி அகிம்சைப்போர். அது வேறு இது வேறு. இப்போது மாவை அவர்கள் அறிவித்திருப்பது ஒரு முடிவை எட்டும்வரை தொடர்ச்சியாக நடத்தப்படப் போகும் அகிம்சைப் போர்.

இதில் நாள் செல்லச் செல்ல வந்து இணைந்துகொள்ளும் மக்களின் எணிணிக்கை பெருகிக்கொண்டே செல்லும். தலைவர்கள் தங்கள் உயிர்களை வெறுத்துத் தியாக வேள்வியில் இருக்கும்போது மக்கள் உணர்ச்சிகரமாகவே தங்களையும் அந்தப் போராட்டத்தில் இணைத்துக் கொள்வர்.

அடுத்த வருடம் நாட்டின் ஜனாதிபதியாக யாரேனும் வந்துவிட்டுப் போகட்டும். மாவையண்ணை உறுதிபடச் சொல்லியிருப்பது, அகிம்சைப் போரைத் தொடர்ச்சியாக நடத்தி அடுத்த வருடம் எப்படியும் தீர்வைக் கண்டுவிடப் போவதாக... நமக்கு அதுதானே முக்கியம்.

- ஆசிரியர்



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."

——— வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

# மண்சரிவு அனர்த்த உயிரிழப்புக்கு வெள்ளையர்களே முழுமுதற் காரணம்

## இலங்கை சி.க.கூ. சமாச தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெள்ளையர்கள் தொலை நோக்குத் திட்டமில்லாமல் தமது தேவையை பூர்த்தி செய்வதற்காக மனிதர்களை துச்சமாக மதித்து செயற்பட்டமையாலேயே இன்று இவ்வாறு மண்சரிவு அனர்த்தத்தில் பலரது உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க சம்மேளனததின் தலைவர் கலாநிதி பி.ஏ. கிரிவெத்தெனிய தெரிவித்தார்.

வடமாகாண சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் "சிக்கனத்துடன் மூலதனத்தை ஆரம்பிப்போம்" என்ற தொனிப் பொருளிலான 90ஆவது சர்வதேச சிக்கன தினம் யாழ்ப்பாணம், வீரசிங்கம் பொது மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

குச்சி வீடுகளை அமைத்துக் கொடுத்து அவர்களை பாதுகாப்பற்ற இடத்தில் குடியேற்றினார்கள். அவர்களின் திட்டமிடாத செயல்களாலேயே மண் மலைகள், பாறைகள் புரண்டு இந்த நிலைக்கு காரணமாக அமைந்தது.இந்த அனர்த்தம் 300இற்கும் அதிகமான மக்களைக்காவுகொண்டுள்ளது.

எதிர்கால நலனைப் பார்க்காது செய்த திட்டங்களால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். திட்டமற்ற செயல்கள் சுற்றாடலை பாதிக்கும். சிக்கன சேமிப்பு பற்றி இன்று உலகமெங்கும் பேசப்படுகின்ற வேளையில் நாமும் சிக்கனமுள்ள புதியவர்களாக மாறவேண்டும்.

நாகரீகம், பெருமை என்று நினைத்து எம்மவர்கள் 2 வருடங்கள் பாவித்துவிட்டு தொலைபேசிகளை வீசுகிறார்கள் இதனால் சுற்றாடலை பாதிக்கிறது. அது போலவே எமது உடை அலங்கார பொருட்கள் எல்லாம் நாம் எமது தேவைக்கு அதிகமாக வாங்குகிறோம்.

யாழ்ப்பாணத்து விவசாயிகள் முன்மாதிரிகளாகச்செயற்படுகிறார்கள் அதை நான் நேரடியாக அவதானித்தேன். விவசாய மேட்டிலே ஒரு பொலுத்தீன், பிளாஸ்ரிக் பொருட்களையும் காணவில்லை. கொப்பி அடித்து வாழ்வது வாழ்வல்ல. மனிதர்களிடம் இருக்க வேண்டிய முக்கிய விடயம் சிக்கனமும் சேமிப்பும்.

எமது சுற்றாடலை சிக்கனமாக வைத்து இலாபத்தை பெற்று நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டும். சிக்கனமாக வாழ்ந்தால் யாரிடமும் கையேந்த வேண்டிய நிலை ஏற்படாது. அடிபணிய வேண்டிய நிலை ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தலில் யாருக்கு ஆதரவு; தீர்மானிக்காத முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி, பொது வேட்பாளர்கள் விவரம் என்பன அறிவிக்கப்படாத நிலையில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்று இப்போது தீர்மானிக்க முடியாது. என்று முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள கட்சித்தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட சந்திப்பின்போது இந்த முடிவு எட்டப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இனிவரும் நாட்களில் முடிவெடுக்கும்போது முஸ்லிம் மக்களின் விருப்பு வெறுப்புக்களும் கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸின் கீழ்மட்ட உறுப்பினர்களது கருத்துக்களைக் கேட்கும் முதற்கட்ட கூட்டம் நாளை திங்கட்கிழமை அம்பாறை மாவட்டத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மீட்பு பணியில் பாகிஸ்தான்

அண்மையில் பதுளை கொஸ்லாந்தை பிரதேசத்தில் பாரிய மண்சரிவுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களைத தெரிவிப்பதுடன் அவர்களுக்கான உதவிகளையும் மீட்புப்பணிகளையும் இலங்கையுடன் இணைந்து செய்ய தயாராகவுள்ளதாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் ஹாசிம் குரேசி தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேவையான அத்தியாவசியமான பொருட்களை தந்துதவுவதிலும் பாகிஸ்தான் அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# நீங்கவில்லை மண்சரிவு அபாயம்

அதிக மழையுடனான வானிலையால் ஆறு மாவட்டங்களில் தொடர்ந்தும் மண் சரிவு அபாயம் காணப்படுவதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மண்சரிவு அபாயம் மற்றும் மழை காரணமாக 2,443 குடும்பங்களைச் சேர்ந்த 10,054 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறினார்.

நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, கம்பஹா, கேகாலை ஆகிய மாவட்டங்களில் மக்கள் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கி வருவதாக இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மண்சரிவு அபாயம் காரணமாக பதுளை மாவட்டத்தில் 831 குடும்பங்களைச் சேர்ந்த 3,122 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் பதுளை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஈ.எல்.எம். உதயகுமார குறிப்பிட்டார்.

ஹல்துமுல்ல, எல்ல, பண்டாரவளை, ஹப்புதலை, பசறை, பதுளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மக்கள் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஹல்துமுல்ல பகுதியிலேயே அதிக எண்ணிக்கையானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பகுதியில் 587 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நான்கு தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

எல்ல பிரதேச செயலகப் பிரிவில் 125 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நான்கு முகாம்களிலும், பண்டாரவளைப்பிரதேச செயலகப் பிரிவில் 16 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இரண்டு முகாம்களிலும், ஹப்புதலை பிரதேச செயலகப் பிரிவில் 87 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இரண்டு முகாம்களிலும், பசறை மற்றும் பதுளை பிரதேசங்களில் தலா எட்டு குடும்பங்கள் வீதம் இருவேறு முகாம்களிலும் தங்கியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்திலும் பலர் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.கலஹா பிரதேசத்திலும் சீரற்ற வானிலையால் மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

# தெரிவுக்குழு நிராகரிப்புக்குப் பின்னால் மோசமான சுயநல அரசியல்



**பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அதிகாரங்கள் போதாது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் அடிக்கடி கூறுகின்றார்கள். அதில் மாற்றுக் கருத்து இல்லை. கூடுதலான அதிகாரங்களைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டுமேயொழிய அதிகாரம் போதாது என்று எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பது கையாலாகாத்தனம்.**

## சங்கர சிவன்

**இனப்பிரச்சினையின்** தீர்வுக்கான அரசியலமைப்புத் திருத்த ஆலோசனைகளைப் பெறுவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்குபற்றுமாறு அரசாங்கம் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது. தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதில்லை என்ற முடிவில் கூட்டமைப்பு பிடிவாதமாக இருக்கின்றது.

அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்கும்படி அரசாங்கம் கேட்கின்றது. எந்த ஆலோசனையையும் நாங்கள் முன்வைக்க முடியாது என்று கூறுவ்து போல இருக்கின்றது கூட்டமைப்பின் நிராகரிப்பு. அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டிய கடப்பாடு கூட்டமைப்புத் தலைவர்களுக்கு உண்டு. தமிழ் மக்கள் இவர்களுக்கு வாக்களித்ததன் பிரதான நோக்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதாகும். இதுதான் இவர்களுக்கு கிடைத்த மக்களாணை. எப்பேர்தும் மக்களாணை பற்றிப் பேசுவர்கள் இப்போது அந்த ஆணைக்கு விரோதமாக செயற்படுகின்றார்கள். தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதன் மூலம் கூட்டமைப்புத் தலைவர்களோ தமிழ் மக்களோ இழப்பதற்கு எதுவுமில்லை. இத்தெரிவுக்குழுவின் மூலம் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைப்பதற்கு இடமுண்டு.

பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அதிகாரங்கள் போதாது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் அடிக்கடி கூறுகின்றார்கள். அதில் மாற்றுக் கருத்து இல்லை. கூடுதலான அதிகாரங்களைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டுமேயொழிய அதிகாரம் போதாது என்று எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பது கையாலாகாத்தனம். பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்வதற்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழு. இதைக் கெட்டித்தனமாக கையாண்டால் பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைப் பெறுவது சாத்தியமாகும்.

தமிழ் மக்களின் கோரிக்கைகள் எல்லாம் பிரிவினையை நோக்கமாகக் கொண்டவை என்ற தப்பான அபிப்பிராயம் சிங்கள மக்கள் மத்தியில் நிலவுகின்றது. இது நியாயமான அரசியல் தீர்வுக்கு பிரதான தடை. தமிழ்த் தலைவர்களின் தவறான செயற்பாடுகளே இந்த அபிப்பிராயம் தோன்றியதற்கான காரணம். அதே தலைவர்கள் தெரிவுக் குழுவில் தோன்றி அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைப்பது சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயத்தைப் போக்கி அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க உதவும்.

சர்வசன வாக்கெடுப்புக்கூடாகவே அரசியல் தீர்வு நடைமுறைக்கு வர முடியுமென்பதால் சிங்கள மக்களின் ஆதரவு அத்தியாவசியம். சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான எந்த முயற்சியையும் தமிழ்த் தலைவர்கள் மேற்கொள்ளவில்லை. தெரிவுக் குழுவில் பங்குபற்றுவது சிங்களத் தலைவர்களுக்கூடாகச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியின் ஆரம்பமாகவும் அமையும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றுவதன் மூலம் நேரடியான நன்மை கிடைப்பதற்கு இடமுண்டு. அது சாத்தியமாகாவிட்டாலும் அரசியல் தீர்வை முன்னெடுப்பதிலுள்ள தடையைப் போக்குவதற்கும் தெரிவுக் குழுவைப் பயன்படுத்தலாம். மொத்தத்தில் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பு பங்குபற்றுவது தமிழ் மக்களுக்கு நன்மையேயொழிய எவ்விதத்திலும் தீமையாகாது. உண்மை நிலை இவ்வாறிருக்க கூட்டமைப்பு தெரிவுக் குழுவை நிராகரிப்பதற்கு பொய்யான காரணங்களைத் தமிழ் மக்களுக்குக் கூறுகின்றது. தெரிவுக் குழுவில் பங்குபற்றினால் உள்ளதையும் இழக்க நேரிடும் என்று ஒரு பொய்க் காரணம். சிங்களப் பேரினவாதிகள் நிறைந்திருக்கும் தெரிவுக் குழுவில் எங்களுக்கு எதுவும் கிடைக்காது என்று இன்னொரு பொய்க் காரணம்.

தெரிவுக் குழுவில் பங்குபற்றினால் உள்ளதையும் இழக்க நேரிடும் என்று அடிக்கடி கூறியவர் வடமாகாண முதமைச்சர். பதின்மூன்றாவது திருத்தத்தைத் தெரிவுக் குழு வெட்டிக் குறுக்கிவிடும் என்பதே அவர் கூறியதன் அர்த்தம். தெரிவுக் குழுவில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் அப்படியே நடைமுறைக்கு வருவதில்லை என்பதும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடனேயே நடைமுறைக்கு வர முடியும் என்பதும் உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்தவருக்கு தெரியாமலிருக்காது. அதேபோல, பதின்மூன்றாவது திருத்தத்தில் செய்யும் எந்த மாற்றமும் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்பதும் பதின்மூன்றாவது திருத்தத்தை வெட்டிக் குறுக்கும் திருத்தத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைப்பது சாத்தியமில்லை என்பதும் இவருக்குத் தெரியும். எல்லாம் தெரிந்துகொண்டு உள்ளதையும் இழக்க நேரும் என்று தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றுகிறார்.

சிங்களப் பேரினவாதிகள் நிறைந்திருக்கும் தெரிவுக் குழுவில் எங்களுக்கு எதுவும் கிடைக்காது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் எல்லோரும் கூறுகின்றார்கள். பேரின வாதிகள் என்று அறியப்பட்ட இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகள் தான் தெரிவுக் குழுவில் இருக்கின்றார்கள். அவர்கள் பெரும்பான்மையாக இல்லை. பேரினவாதிகள் நிறைந்திருக்கும் தெரிவுக்குழு என்று இவர்கள் கூறுவதைப் பார்க்கும் போது சிங்களப் பிரதிநிதிகள் எல்லோரையும் பேரினவாதிகள் என்று முத்திரை குத்துகின்றார்கள் போல் தெரிகின்றது. சிங்களப் பிரதிநிதிகள் கூடுதலாக இருப்பதால் தெரிவுக்குழுவுக்குப் போகவில்லை என்றால் நாடாளுமன்றத்துக்கு ஏன் போகின்றார்கள்? அங்கேயும் சிங்களப் பிரதிநிதிகள் தானே கூடுதலாக இருக்கின்றனர். நாடாளுமன்றத்தில் இவர்கள் கருத்துக்களை முன்வைக்கும்போது அக்கருத்துக்களை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் முன்வைப்பதில்லை. ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் தமிழ் மக்களின் கோரிக்கையை எடுத்துக் கூறுவதாகச் சொல்கின்றார்கள். தெரிவுக் குழுவுக்கு ஏன் வேறான அணுகுமுறை? எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதால் தெரிவுக் குழுவுக்குப் போகவில்லை என்று சொல்வது ஏன்? எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை எடுத்துக்கூற வேண்டிய கடப்பாட்டைத் தெரிவுக் குழு விடயத்தில் ஏன் புறக்கணிக்கின்றார்கள்.

**சிங்களப் பிரதிநிதிகள் கூடுதலாக இருப்பதால் தெரிவுக்குழுவுக்குப் போகவில்லை என்றால் நாடாளுமன்றத்துக்கு ஏன் போகின்றார்கள்? அங்கேயும் சிங்களப் பிரதிநிதிகள் தானே கூடுதலாக இருக்கின்றனர்!**

தெரிவுக்குழுவை நிராகரிப்பதற்கு தாங்கள் நொண்டிக் காரணங்களைக் கூறுகின்றார்கள் என்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். தெரிவுக் குழுவை நிராகரிக்கும் முடிவுக்குப் பினனாலுள்ள அரசியலை அம்பலப் படுத்த விரும்பாததாலேயே போலிக் காரணங்களைக் கூறுகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புலி சார்புப் புலம்பெயர் அமைப்புகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கின்றுது. இந்தப் புலம் பெயர் அமைப்புகள் கூட்டமைப்புக்குத் தாராளமாக நிதியுதவி செய்கின்றன. கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சித் தலைமைக்கும் பங்காளிக் கட்சிகளுக்குமிடையே முரண்பாடு தொடங்கிய ஆரம்ப நாட்களில் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதிக்குக் கணக்கு எங்கே என்று பங்காளிக் கட்சிகள் கேள்வி எழுப்பியதை இங்கு நினைவூட்டலாம். புலம்பெயர் அமைப்புகளிடமிருந்து கிடைக்கும் பணம் தான் அந்தப் பணம். இதனால் புலம் பெயர் அமைப்புகள் சொல்வதைச் செய்ய வேண்டிய நிலையில் கூட்டமைப்பு இருக்கின்றது. அதனால் தான் அரசாங்கம் தீர்வை முன்வைக்காத வரை புலம் பெயர் மக்களின் எந்தக் கோரிக்கையையும் நிராகரிக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்று 26-06-2013ஆம் திகதி பாரிஸ் நகரில் ஒரு இணையத் தளத்துக்கு சுரேஷ் பிரேமசந்திரன் கூறினார்.

கூட்டமைப்புக்கு நிதியுதவி வழங்கும் புலம் பெயர் அமைப்புகள் இன்னும் தனிநாட்டு மாயையிலிருந்து விடுபடவில்லை. இலங்கையில் அரசியல் தீர்வு எட்டாக்கனியாகிக் கொண்டுபோனால் தமிழ் மக்கள் மத்தியில் தனிநாட்டுக்கான ஆதரவு வளரும் என்று இவை கற்பனை செய்கின்றன. அந்த நோக்கத்துக்கு அமைவாகச் செயற்பட வேண்டும் என்று கூட்டமைப்புக்குப் புலம் பெயர் அமைப்புகள் கட்டளை பிறப்பித்திருக்கின்றன. தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்காததன் மூலமும் அரசியல் தீர்வு கோரி எவ்வித ஆர்ப்பாட்டமும் செய்யாததன் மூலமும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றாததன் மூலமும் கூட்டமைப்புக்குள்ளிருந்து தனிநாட்டுக்கு ஆதரவான கருத்துக்கள் வெளிவருவதைத் தடுப்பதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாததன் மூலமும் கூட்டமைப்பு அந்தக் கட்டளையை ஏற்றுச் செயற்படுகின்றது. இதுதான் தெரிவுக் குழுவை நிராகரிப்பதற்குப் பின்னாலுள்ள அரசியல். இது தமிழ் மக்களை அழிவை நோக்கி இட்டுச் செல்லும் மோசமான அரசியல்.

கூட்டமைப்புத் தலைவர்கள் தங்கள் சுயநலத் தேவைகளுக்காகத் தமிழ் மக்களை நடுத் தெருவில் கைவிடுகின்றார்கள் என்பதே இதன் அர்த்தம். சுதந்திரம் பற்றிப் பெரிதாகப் பேசுகின்றவர்கள் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பொறுத்த வரையில் சுதந்திரமாகச் செயற்பட முடியாமல் புலம் பெயர் அமைப்புகளுக்குள் அடங்கிப் போயிருக்கின்றார்கள். அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கோ கூட்டமைப்புக்குள்ளிருந்து தனிநாட்டுக்குச் சார்பான கருத்துக்களை தெரிவிப்பவர்களைக் கட்டுப்படுத்துவதற்கோ நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதற்கோ இவர்களுக்குச் சுதந்திரம் இல்லை. இப்படியானவர்கள் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காக எப்படிச் செயற்பட முடியும்?

இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுதான் தமிழ் மக்களின் பிரதான தேவை. இனப்பிரச்சினை தீரும்போது மற்றைய பிரச்சினைகள் தாமாகவே மறைந்துவிடக் கூடியவை. ஒரே நாளில் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது. கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் தவறவிடாமல் கட்டங்கட்டமாகத் தீர்வை அடைவதற்கு முயற்சிப்பதுதான் விமோசனத்துக்கான வழி. கூட்டமைப்புத் தலைமை அதற்குத் தயாராக இல்லையென்றால் நடைமுறைச் சாத்தியமான வழியில் தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய மாற்றுத் தலைமையின் பக்கம் தமிழ் மக்கள் திரும்ப வேண்டும்.

## மலையக அனர்த்த பாதிப்புக்களுக்கு உதவி வழங்க பல நாடுகள் தயார்

மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுவிட்ஸர்லாந்து, போலாந்து, கியூபா, பெல்ஜியம் ஆகிய நாடுகளும் அனுதாபங்களை தெரிவித்துள்ளன.

சுவிட்ஸர்லாந்து, போலாந்து, கியூபா, பெல்ஜியம் ஆகிய நாடுகளின் தூதுவர்களும், பங்களாதேஷ் உயர்ஸ்தானிகரும் தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிடம் கையளித்தபோது, அனுதாபத்தையும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை நியமனக கடிதங்கள் கையளிக்கப்பட்டதாக ஜனாதிபதி பேச்சாளர் மற்றும் சர்வதேச ஊடக பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிடமிருந்து உதவிகள் தொடர்பான ஏதாவது வேண்டுகோள்கள் விடுக்கப்படுமாயின், அவற்றை உடனடியாக வழங்குவதற்கு அந்த நாடுகள் தயாராக இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது, நாட்டில் இடம்பெறும் நிவாரண செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி குறித்த பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேற்குலக நாடுகளுக்கு நிகராக விஞ்ஞானக் கல்வியில் முன்னேற்றம்

## ஜனாதிபதி மகிந்த திருப்தி

அபிவிருத்தியடைந்த மேற்குலக நாடுகளில் பேணப்பட்டு வரும் தொழில நுட்ப விஞ்ஞான கல்வி முறைமைகளைப்போன்று எமது நாட்டின் கல்வி முறைமையும் முன்னேற்றத்தை நோக்கி மாற்றமடைந்து செல்கிறது என நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கான விருது வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் பத்தரமுல்லை வோர்டேர்ஸ் எச் ஹோட்டலில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சிகளின் அமைச்சர் சம்பிக ரணவக்கவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி:

நாட்டில் பாரம்பரிய கல்வி முறைமையானது பெரும்பாலான கலைப்பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. கலைத் துறையினையும் பாரம்பரியங்களையுமே மிகவும் கூடுதலாக பாடசாலைகளில் கற்பித்து வந்தனர். அப்போது விஞ்ஞான தொழில்நுட்பம் கற்பிப்பது மிகவும் அரிதாகவே காணப்பட்டது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் விஞ்ஞான பாடமானது டி.ஏ.ராஜபக்ஷ வித்தியாலயத்திலும், மொனராகலை மாவட்டத்தில் மஹானாம வித்தியாலயத்தில் மட்டுமே விஞ்ஞானப் பாடம் கற்பிக்கப்பட்டது.

அப்போதய காலத்தில் மருத்துவர் பொறியியலாளர் விஞ்ஞானிகள் என பல துறைகளில் கற்க விருப்பம் இருந்தாலும் வசதிகள் காணப்படவில்லை.

அவ்வகையில் தற்போதய சந்ததியினரான நீங்கள் மிகவும் அதிஷ்டசாலிகள். உங்களுடைய இலட்சியம் என்னவோ அதை நீங்கள் இலகுவாக அடைய முடியும். உங்களுடைய ஆராய்ச்சிகள் எமது நாட்டில் மட்டுமல்ல சர்வதேச அளவில் வெளியிடக் கூடியளவில் தாங்கள் சர்வ



தேசத்தில் ஒருவராக அங்கம் வகிக்க முடியும்.

அண்மையில் நான் திருகோணமலை நகரின் பதவியா பிரதேசத்திற்கு விஜயம் செய்தேன். அங்குள்ள பாடசாலையில் மாணவர்கள் அனைவரும் மகிந்தோதய கல்விக்கூடத்தில் கொண்டுள்ள ஆர்வத்தினையும் விருப்பத்தினையும் கண்டு மிகவும் சந்தோசமும் பூரிப்பும் அடைந்தேன் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி களின் அமைச்சின் செயலாளர் திருமதி தாரா விஜேயதிலக நிறுவனத்தின் தலைவர் பேரா சிரியர் எச்.ஜனக உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## மகிந்தவை சந்திக்க மோடி ஆர்வம் கவனத்தை ஈர்த்த தூக்குத் தண்டனை

தமிழக மீனவர்களுக்கு கொழும்பு நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திரமோடி, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடுவார் என்று இந்திய அரசாங்கத்தரப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இந்திய மீனவர்கள் ஐந்து பேருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழகத்தில் இடம்பெற்று வரும் போராட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் உடனடி தீர்வைக் காண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் சட்டமுறைப்படி 1976 ஆம் ஆண்டு முதல் மரணதண்டனை நிறைவேற்றம் மேற்கொள்ளப்படுவதில்லை. எனினும் இந்திய மீனவர்களின் நிலை தொடர்பில் இந்தியா ஏற்கனவே சில முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக, இந்திய அதிகாரிக்ள் ஏற்கனவே இலங்கையின் ஜனாதிபதி காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தநிலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை காத்மண்டுவில் சார்க் மாநாடு நடைபெறவுள்ளது.

இதன்போது மீனவர் மரண தண்டனை தொடர்பில் இந்திய பிரதமர், இலங்கை ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவார் எனறு இந்திய அரசாங்கத்தரப்பு தெரிவித்துள்ளது.

# மண்மேடுகளை குடைந்து சடலங்களைத்தேடும் அவலம்

## சீரற்ற காலநிலையால் சவால்





கொஸ்லந்தை மிரியபெத்த பகுதியில் நிலவும் சீரற்ற காலநிலையால் மண்சரிவில் காணாமற்போனோரை தேடும் பணிகள், மீட்புப் பணிகளில் பெரும் தடங்கல் ஏற்பட்டுள்ளது. கொஸ்லந்தை மீரிய பெத்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில், 192 பேர் காணாமற் போயிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் மீட்புப்பணிகள் தொடர்கின்றன.

எனினும் பெண்கள் அணியக் கூடிய பலவகையான ஆபரணங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. மழையுடன் கூடிய காலநிலை தொடருவதனால் மீட்புப் பணிகளை முழுமையாக முன்னெடுப்பதில் பாரிய சிரமங்கள் ஏற்பட்டிருந்தன.

அப்பகுதியில் தொடர்ந்தும் மண்மேடுகள் சரிந்த வண்ணம் காணப்படுகின்றன. அபாயகரமான சூழ்நிலைக்கு மத்தியிலேயே முப்படையினரும் பொலிஸாரும் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் சம்வம் இடம்பெற்ற பகுதியை பார்வையிட வருகை தருவது மீட்புப் பணிகளை முன்னெடுப்பதற்கு பாரிய நெருக்கடியை தோற்றுவித்துள்ளது.

சுமார் 40, 50 அடி உயரங்களுக்கு மண்மேடுகள் வீடுகளை மூடிக்காணப்படுவதனால் மீட்பு நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு தேவையான பாதையை உருவாக்குவதே சிக்கலாக அமைந்திருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

எனவே பாதையை சீர்செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதுடன், சடலங்களை இனங்கண்டு கொள்வதற்காக பொலிஸ் மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மண்சரிவு தொடர்ந்தும் சிறியளவில் அப்பிரதேசத்தில் இடம்பெற்று வருவதனால் மண்ணை அகழ்ந்து இன்னுமொரு இடத்தில் போட முடியாத இக்கட்டான சூழ்நிலையொன்று அங்கு உருவாகியுள்ளது. அப்பிரதேசம் முழுவதும் சேறு நிறைந்துக் காணப்படுவதனால் மீட்பில் பாரிய மந்தகதி ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி மற்றும் இராணுவத் தளபதி ஆகியோரின் பணிப்புரைக்கமைய இராணுவ கமாண்டோ மற்றும் விசேட படைப் பிரிவினர், மணல் மேட்டில் பணியாற்றக்கூடிய நிபுணத்துவம் பெற்றோர் நேற்று அங்கு அனுபி வைக்கப்பட்டுள்ளனர். மண் அகழ்விற்காக நாட்டின் ஏனைய பகுதிகளில் பயன்படுத்தப்படும் அனைத்து பாரிய ரக இயந்திரங்களும் கொஸ்லந்த பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தெனவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன் இடம்பெயர்ந்துள்ள மக்களை பாதுகாப்பான இடத்தில் மீளக்குடியமர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் இராணுவம் முன்னெடுத்து வருகின்றது.

சம்பவத்தை தொடர்ந்து, மீரியபெத்த தோட்டத்தைச் சுற்றி ஏனைய தோட்டங்களைச் சேர்ந்த மக்களும் பாதுகாப்பின் நிமித்தம் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டு பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 243 குடும்பங்களைச் சேர்ந்த 900 பேர் இரண்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் ஆடைகள் என்பன அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன வென அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்தது. இடப்பெயர்ந்தவர்களுள் சுமார் 580 பேர் கொஸ்லந்த கணேச மஹா வித்தியாலயத்திலும் 315 பேர் பூனாகல மஹா வித்தியாலயத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## திருமலையில் நடமாடும் சேவை

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கியதாக நடமாடும் சேவைகளை நடாத்த ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இந்த நடமாடும் சேவைகள் நடாத்தப்படவுள்ளன.

இதன்படி ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் சேவைகள் இடம்பெறவுள்ளன.

## பெண்களுக்கு தனியான வங்கி அடுத்த ஆண்டில் ஆரம்பம்

(கொழும்பு)

பெண்களுக்கு மட்டுமேயான தனியான விசேட வங்கியை 2015 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கவுள்ளதாக கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பீ. ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பகூவ தேர்தல் தொகுதி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமையவே பெண்களுக்கான வங்கிச்சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.நா.விசாரணைக்கு போலி ஆவணங்கள் கூட்டமைப்பின் வவுனியா அமைப்பாளர் தலைமறைவு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வவுனியா அமைப்பாளர் தலைமறைவாகியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அலவ் பிள்ளே விஜேந்திரகுமார் எனப்படும் சன் மாஸ்டர் என்ற நபரே இவ்வாறு தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் யுத்தக் குற்றச்செயல் விசாரணைகளுக்கு போலியான தகவல்களை வழங்கியதாக சன் மாஸ்டர் மீது குற்றஞ்சுமத் தப்பட்டுள்ளது.

விசாரணை தொடர்பான படிவங்களை வைத்திருந்ததாகவும், வெற்றுப்படிவங்களில் கையொப்பங்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இவ்வாறான ஆவணங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சின்னத்தம்பி கிருஸ்ணராஜா என்பவரிடம் நடாத்திய விசாரணைகளின் போது, சன் மாஸ்டருக்கு இந்த சூழ்ச்சியில் தொடர்பு இருக்கின்றமை கண்டறியப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சன் மாஸ்டர் கொழும்பு அல்லது புறநகர் பகுதியொன்றில் தலைமறைவாக இருக்கக்கூடுமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சன் மாஸ்டரே தகவல்களை திரட்டுமாறு தமக்கு அறிவுறுத்தல் விடுத்ததாக கிருஸ்ணராஜா குறிப்பிட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணை செய்து கொண்டிருந்த போதும் சன் மாஸ்டர், கிருஸ்ணராஜாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தார் எனதெரிவிக்கப்படுகிறது.



செலான் வங்கியின் ஏற்பாட்டில் சிறுவர்தின நிகழ்வு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி கல்விவலய பணிப்பாளர் கிருஸ்ணகுமார் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம்.... (11)

## மீள்புனரமைப்பு இன்றி காணப்படும்

# ஆனைக்கோட்டை - நாவலடி வீதி அழிந்துள்ளது

## சமூக ஆர்வலர் நவரத்தினம் சாம்பசிவம் கவலை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட ஆனைக்கோட்டை - நாவலடி வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்பின்றியுள்ளது.

கடந்த 15 வருடகாலத்திற்கு மேலாக ஆனைக்கோட்டை - நாவலடி வீதியை மீள்புனரமைப்பு செய்யுமாறு 10 இற்கு மேற்பட்ட கடிதங்களையும் - மகஜர்களையும் இதுவரை சமர்ப்பித்து விட்டோம்.

ஆனால் மானிப்பாய் பிரதேச சபையினர் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது வேதனையளிக்கிறது.

இவ்வாறு ஆனைக்கோட்டையூர் சமூக ஆர்வலர் நவரத்தினம் சாம்பசிவம் கவலையுடன் தெரிவித்தார்.

போக்குவரத்து செய்யமுடியாத ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியின் இணைப்பு வீதியான நாவலடி வீதி ஏன் புறக்கணிப்பு செய்யப்படுகின்றது? என்ற தலைப்பில் சமூக ஆர்வலர் நவரத்தினம் சாம்பசிவம் மேலும் கூறுகையில்,

வலி.தென்மேற்கில் 28 கிராம அலுவலர் பிரிவு உண்டு.

இதில் ஆனைக்கோட்டை கிராமம் பரந்து விரிந்த பாரிய பிரதேசம். இப்பிரதேசம் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயம், ஆனைக்கோட்டை சிவன் கோவிலடி நாவலடி வைரவர் கோவில், பிரதேச வைத்தியசாலை, இயந்திர மயப்படுத்தப்பட்ட கைத்தொழிற்சாலைகள், வர்த்தகக்கடைகள் என பல முக்கிய உட்கட்டுமானங்களைக் கொண்ட ஸ்தாபனங்கள், ஆலயங்கள் நிறைந்த பிரதேசமாகும்.

மேலும் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு ஆதனவரி மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றோம்.

தினமும் ஆனைக்கோட்டை - நாவலடி வீதியூடாக 1000 முதல் 2000 வரையிலான மக்கள் பிரயாணம் செய்கின்றனர்.

எனவே மானிப்பாய் பிரதேச சபையின் தலைவர் - செயலாளர் ஆகியோர் இவ்வீதி அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கி இவ்வாண்டு புனரமைப்பு செய்ய முன்வர வேண்டும்.

இவ்வீதி பிரதேச சபையின் வீதி வலையமைப்பில் ஆனைக்கோட்டை உப அலுவலகத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட வீதிகளில் ஒன்று எனவும் சமூகஆர்வலர் நவரத்தினம் சாம்பசிவம் தெரிவித்தார்.

எனவே, காலம் தாழ்த்தாது மானிப்பாய் பிரதேச சபையினர் மதிப்பீட்டையும் வரைபடத்தையும் தயாரித்து இவ்வீதி வேலையை ஆரம்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# சைவசமய தீட்சை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் ஆண்டு தோறும் நடைபெறும் சைவ சமயதீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை சபை மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என சபைச்செயலாளர் இரா.செல்வ வடிவேல் அறிவித்துள்ளார்.

தத்தமது பாடசாலைகளில் சைவசமய தீட்சை பெற விரும்பின் பாடசாலை செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கலாசார பேரவையின் தேனகம் மலர் வெளியீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, மண்முனை வடக்குப்பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையினால் கடந்த வியாழக்கிழமை முத்தமிழ் விழாவும் கலை நிகழ்வும், தேனகம் சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்வும் கலைஞர கௌரவிப்பு நிகழ்வும் மண் முனை வடக்கு உதவிப்பிரதேச செயலாளர் எஸ்.யோகராசா தலைமையில் இடம்பெற்றது.




இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தர் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி க.பிறேம்குமார், கௌரவ அதிதியாக உதவி மாவட்ட செயலாளர் எஸ்.ரங்கநாதன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள், அலுவலர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள், இலக்கியவாதிகள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது 21 ஆவது தேனகம் சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றதுடன் நாடகம், இசை, இலக்கியம், கூத்து போன்ற துறைகளில் சிறப்பு பெற்று மட்டுநகர் மண்ணுக்கு பெருமையைத் தேடித்தந்த பல கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (90)

# விடுதி நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதியொன்று புதிதாக அமைக்கப்பட்டுவருகிறது.

திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு பின்புறமாகவுள்ள பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான காணியிலேயே இவ்விடுதி நிர்மாணிக்கப்படுகிறது. அடுத்த வருடம் செம்ரெம்பர் மாதமளவில் இவ்விடுதி திறக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (33)

# வீதியைபுனரமைக்க கோரிக்கை

அச்சுவேலி கருங்காலி வீதி பழுதடைந்த நிலையில் புனரமைப்பின்றிக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். குறித்த வீதியானது மண் வீதியாக பாரிய குழிகள் மற்றும் சிறுகற்களுடன பரவிக் காணப்படுவதுடன் மழை காலத்தில் சேறும் சகதியுமாக உள்ளதாகவும் தெரிவிக்கும் பயணிகள் இதனால் தாம் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# முரசின் இன்றைய பலன்



(02.10.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 16 ஆம் திகதி.
தச மித்திதி / சித்தயோகம்.
சதய நட்சத்திரம் முன்னிரவு 09.18 வரை. பின் பூரட்டாதி.
இராகு காலம் 09.03 - 10.33 வரை. சுபநேரம் 03.03 - 04.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராது சிக்கலை எதிர்கொள்ளல், தாயாரின் நோய் குணமடைவதினால் மகிழ்வு |
| ரிஷபம் | பிரச்சினையின் ஆணி வேரைக்கண்டறிதல், சுவீப் அதிர்ஷடமுண்டு. |
| மிதுனம் | திருமண நிறைவேற்றத்துக்காக தெய்வவழிபாட்டில் ஈடுபடல், குடும்பத்தில் களோபரம் உருவாதல். |
| கடகம் | அறிமுகமில்லாத நபர் குறித்து அவதானம் தேவை, சிநேகிதரின் ஆலோசனையைக் கேட்டல். |
| சிம்மம் | நிகழ்விற்கு போகாமையால் மனவேதனைப்படல், விமர்சனங்களுக்கு அஞ்சாமல்விடல். |
| கன்னி | வியாழசுகம் இருப்பதினால் தனியாக செயற்படமுனைதல், நட்புவட்டம் சுமுகமாக இருக்கும். |
| துலாம் | பிறர் நம்பிக்கையில் அவதானம் தேவை, மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்காமை நலன் பயக்கும். |
| விருச்சிகம் | உறவுக்கு கரம் நீட்டல், தொழில் சிறக்க யுத்தியை கையாள்தல். |
| தனுசு | சக ஊழியர்களின் குறைகளை மன்னித்துவிடல், ஆடம்பரச் செலவுகளை குறைக்க நினைத்தல். |
| மகரம் | பிறருக்காக சில பொறுப்புக்களை ஏற்றல், எதிர்பார்த்த பணவரவு ஏற்படும். |
| கும்பம் | உடன் பிறந்தவர்கள் சுபகாரிய நிகழ்விற்கு ஆதரவு வழங்குதல், உறவினர் வருகையால் மகிழ்வு. |
| மீனம் | நண்பர்களினால் நிம்மதியிழப்பு, குடும்பத்தில் நிலவிக் காணப்பட்ட முரண்பாடு சுமூகநிலை அடைதல். |


# முரளி நல்லிணக்க ருவென்ரி-20 யாழ். மத்தியில் இன்று இறுதி

## நிகழ்வை சிறப்பிக்க வருகிறார் ரங்கன ஹேரத்

(யாழ்ப்பாணம்)

முரளி நல்லிணக்க ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு வீரர்களின் கிரிக்கெட் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட முரளி நல்லிணக்க ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் கடந்த 29ஆம் திகதி முதல் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெற்று வந்தது.




இந்நிலையில் இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்றைய தினம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. முதலாவது அரையிறுதிப் போட்டியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியும் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். அசான் 42, அஞ்யுலா 14, பிரான்ஸ்சிங்கே 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரி. வீரக்கோன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி 17 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜெயமன்ன 19, தல்பாஹட் 21, மொகொற்றி 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அஞ்யுலா 15 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, கே. பெரேரா 23 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக சகலதுறையிலும் ஜொலித்த அஞ்யுலா தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் காலி றிஸ்மன் கல்லூரி அணியும் பொலநறுவை மாவட்ட இணைந்த அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய றிஸ்மன் கல்லூரி அணி சித்தார கிம்ஹனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் றிஸ்மன் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய சித்தார கிம்ஹன் 62 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 68 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். மற்றும் மெண்டிஸ் 18, டி. சில்வா, பைமல் ஆகியோர் தலா 12, லக்ஷன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டெயவன்ச, சண்டிமல் சில்வா ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு 150 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பொலநறுவை மாவட்ட இணைந்த அணி டி.சில்வா, அசலங்கா, தீஹசனா ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

இறுதியில் பொலநறுவை மாவட்ட இணைந்த அணி 19 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் டசனஜாக 22 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் டி.சில்வா, அசாலங்கா, தீகசனா ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சித்தார கிம்ஹன் தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் றிஸ்மன் கல்லூரி அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப் போட்டிகள் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. காலை நடைபெறவுள்ள பெண்களுக்கான இறுதிப் போட்டியில் சீனிகம பெண்கள் அணியும் பதுளை பெண்கள் அணியும் மோதவுள்ள அதே வேளை, பிற்பகல் 2:00 மணிக்கு நடைபெறும் ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் ஆனந்தாக் கல்லூரி அணியும் காலி றிஸ்மன் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

இப்போட்டி நிகழ்விற்கு இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கண ஹேரத் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## அரையிறுதியில் ஜோகோவிச்



(பாரிஸ்)

மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் முன்னேறினார்.

பாரிசில் ஆண்களுக்கான மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் முதல் நிலை வீரர் சேர்பியாவின் ஜோகோவிச், தரவரிசையில் 8ஆவது இடத்திலுள்ள இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவை எதிர்கொண்டார். முதல் செட்டை 7-5 என கைப்பற்றிய ஜோகோவிச், இரண்டாவது செட்டையும் 6-2 என தன்வசப்படுத்தினார். முடிவில், ஜோகோவிச் 7-5, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு காலிறுதியில் சுவிஸின் பெடரர் 6-7, 5-7 என கனடாவின் மிலோஸ் ரவோனிச்சிடம் தோல்வியடைந்தார்.

## களத்திற்கு வெளியில்...

கப்டன் பொறுப்பேற்ற நாளிலிருந்தே டோனி என்னைக் கவர்ந்து விட்டார். அவர் அற்புதமான கப்டன். இந்தியாவுக்கு ருவென்ரி-20, 50 ஓவர் ஆட்டங்களில் உலகக் கோப்பையை வென்று கொடுத்துள்ளார். அத்தோடு, அவரது தலைமையில்தான் இந்திய அணி டெஸ்ட் தொடரில் முதலிடத்தைப் பிடித்தது.
**கில்கிறிஸ்ட் (அவுஸ்ரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர்)**

பந்துவீச்சாளர்கள் 15 டிகிரி வரை மட்டுமே முழங்கையை மடக்க சர்வதேச கிரிக்கெட் சபை தற்போது அனுமதித்துள்ளது. இலங்கையின் முத்தையா முரளிதரன் இந்த அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக முழங்கையை சுழற்றுவார். தற்போதைய விதி அப்போது இருந்திருந்தால் முரளிதரன் கிரிக்கெட் விளையாடியிருக்கவே முடியாது.
**மொகமட் யூசுப், (பாகிஸ்தான் முன்னாள் வீரர்)**

வெற்றிக்கென்றே பிறந்தவர் கிறிஸ்டியானோ றொனால்டோ. வெற்றி பெறுவதும், சாதனைகளை முறியடிப்பதும் அவரது இரத்தத்திலேயே கலந்துள்ளது. ரியல் மட்ரிட் கிளப் அணி சார்பில் பல சாதனைகளைப் படைத்து வரும் அவர், விரைவில் போர்த்துக்கல் அணிக்காகவும் கோப்பை வென்று கொடுப்பார்.
**பெர்னாண்டோ சான்டோஸ் (போர்த்துக்கல் பயிற்சியாளர்)**

மெஸ்சி, கிறிஸ்டியானோ றொனால்டோ இருவரும் அசாதாரணமான வீரர்கள். ஆனால், இருவரும் வித்தியாசமானவர்கள். றொனால்டோ சக்தியும், யுக்தியும் நிறைந்த வீரர் என்றாலும், மெஸ்சியைப் போல நுணுக்கமான யுக்திகள் அவரிடம் இல்லை.
**பேபியோ கேபெலோ (ரியல் மட்ரிட் முன்னாள் பயிற்சியாளர்)**

## இந்தியா, இலங்கை முதல் ஒரு நாள் இன்று

(கட்டாக்)

இந்திய, இலங்கை அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டம் இன்று கட்டாக்கில் நடைபெறவுள்ளது.

இந்திய அணியின் கப்டன் டோனிக்கு முதல் 3 போட்டிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்திய அணிக்கு ஹோலி கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இதன் காரணமாக இந்திய அணிக்கு இத்தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெயவர்த்தன, சங்கக்கார, கப்டன் மத்தியூஸ், டில்சான், திசார பெரேரா போன்ற சிறந்த வீரர்கள் இலங்கை அணியில் உள்ளதால் இந்திய அணிக்கு எல்லா வகையிலும் சவாலாக செயற்படுவார்கள் என நம்பப்படுகின்றது.

பகல்-இரவாக நடைபெறும் இந்த ஆட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பனிப்பொழிவால் 5 ஆட்டங்களுமே 1 மணி நேரத்துக்கு முன்னதாக ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டெஸ்டில் 8 ஆயிரம் ஓட்டங்களை கடந்த யுனிஸ்கான்

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் இரட்டைச் சதம் விளாசிய (213) யுனிஸ்கான் ஒரே நாளில் பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆனார்.

அதன் விபரம் வருமாறு: அவுஸ்ரேலியாவுக்கு எதிராக இரட்டைச் சதம் விளாசிய 4ஆவது பாகிஸ்தான் வீரர் யுனிஸ்கான் ஆவார். ஏற்கனவே தஸ்லிம் ஆரிப் (210 ஓட்டங்கள்) 1980ஆம் ஆண்டிலும், மியாண்டட் (211 ஓட்டங்கள்) 1988ஆம் ஆண்டிலும், சலீம்மலிக் (237 ஓட்டங்கள்) 1994ஆம் ஆண்டிலும் இரட்டைச் சதம் அடித்துள்ளனர். 36 வயதான யுனிஸ்கானுக்கு இது 5ஆவது இரட்டைச் சதமாகும். 5 மற்றும் அதற்கு மேல் இரட்டைச் சதம் ருசித்த 13 வீரர்களில் ஒருவராக இவரும் இணைந்துள்ளார். மியாண்டட்டுக்கு (6 இரட்டை சதம்) அடுத்து அதிக இரட்டைச் சதம் எடுத்த பாகிஸ்தான் வீரராக யுனிஸ்கான் திகழ்கின்றார்.

181 ஓட்டங்கள் எடுத்த போது டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 8 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 3ஆவது பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பை யுனிஸ்கான் பெற்றார். அவர் இதுவரை 93 டெஸ்டில் விளையாடி 27 சதம் உட்பட 8,032 ஓட்டங்கள் குவித்துள்ளார். முதல் இரு இடங்களில் மியாண்டட் (8,832 ஓட்டங்கள், 124 டெஸ்ட்), இன்சமாம் உல்-ஹக் (8,829 ஓட்டங்கள், 119 டெஸ்ட்) உள்ளனர்.

பாகிஸ்தான் அணியில் 3ஆவது துடுப்பாட்ட வரிசையில் இறங்கிய அசார் அலி (109 ஓட்டங்கள்), 4ஆவது வரிசையில் ஆடிய யுனிஸ்கான் (213 ஓட்டங்கள்), 5ஆவது வரிசையில் விளையாடிய மிஸ்பா உல்-ஹக் (101 ஓட்டங்கள்) மூவரும் சதம் அடித்துள்ளனர். பாகிஸ்தான் தரப்பில் ஒரே இனிங்ஸில் 3, 4, 5ஆவது வரிசை வீரர்கள் சதம் அடிப்பது இதுவே முதல் தடவையாகும்.

டெஸ்டில் ஒட்டுமொத்தமாக அதிக ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தான் கப்டன் என்ற பெருமையை இம்ரான்கானிடம் (48 டெஸ்டில் 2,408 ஓட்டங்கள்) இருந்து மிஸ்பா உல்-ஹக் தட்டிப்பறித்துள்ளார். ஒரு கப்டனாக மிஸ்பா 31 டெஸ்டில் 2,447 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

# நாடு கடந்தும் சாதனை

## உலக கிண்ண கராத்தேயில் வல்வை வாசிகளுக்கு பதக்கம்





உலகக் கிண்ண கராத்தே போட்டியில் வல்வெட்டித்துறையைப் பூர்வீகமாகக் கொண்ட லண்டனில் வாசிக்கும் சகோதரர்கள் இரு தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

உலகக் கிண்ணக் காரத்தே போட்டி ஒக்ரோபர் 15ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை போலாந்தில் நடைபெற்றது. இதில் 36 நாடுகளைச் சேர்ந்த !750 வீர.வீராங்கனைகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியதுடன் பதக்கங்களையும் வென்று அசத்தினர்.

வல்வெட்டித்துறையைப் பூர்வீகமாகக் கொண்ட லண்டன் வாசிக்கும் ஆர்த்தி கருணாகரன் மற்றும் அகிலன் கருணாகரன் ஆகியோர் இப்போட்டியில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தினர். 14 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் ஆர்த்தியும் 7 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் அகிலனும் பங்குகொண்டு பதக்கங்களை வென்றுள்ளனர். இவர்கள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர். மேற்படி இருவரும் சென்சே கணேசலிங்கத்திடம் கராத்தே கலையைக் கற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நெல்லியடி மத்தி மங்கைக்கு அமெரிக்காவில் பயிற்சி

(கொழும்பு)

இலங்கை பாடசாலை துப்பாக்கி சுடும் விளையாட்டு சங்கத்தினால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட துப்பாக்கி சுடும் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி வீராங்கனை தாயனி ஸ்ரீசிதம்பரலிங்கம் இரண்டாமிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளார். தேசிய ரீதியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட தாயனி பயிற்சியாளராகத் தெரிவு செய்யப்பட்டு மேலதிக பயிற்சிக்காக அமெரிக்காவுக்குப் பயணமாகவுள்ளார்.

தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட இத்துப்பாக்கி சுடுதல் போட்டியில் முதல் ஆறு இடங்களைப் பிடித்துக் கொண்டோர் பயிற்றுவிப்பாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். இதில் இடம்பிடித்த ஒரேயொரு தமிழ் வீராங்கனையாக தாயனி திகழ்கின்றார்.

இலங்கையில் எதிர்வரும் 2017ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியில் பங்குபெறவுள்ள தேசிய அணி வீரர்களுக்கான பயிற்றுவிப்பாளராக பணியாற்றுவதற்காகவே மேற்படி ஆறு பேர் கொண்ட அணி அமெரிக்காவுக்கு மேலதிக பயிற்சிக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மற்றுமொரு நெல்லியடி வீராங்கனை செல்வி பிரதீபா குமாரவேல் எதிர்வரும் நவம்பர் மாதம் போலந்து நாட்டில் நடைபெறவுள்ள பாடசாலை மட்ட சர்வதேச சுடும் போட்டியில் இலங்கை அணி சார்பாகப் பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரைடருக்கு வாய்ப்பு

நீண்ட இடைவெளிக்கு பின்னர் ஜெஸ்சி ரைடருக்கு, நியூசிலாந்து ஏ அணியில் இடம்வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் ஐக்கிய அரபு எமிரேட்சில் சுற்றுப்பயணம் செய்துவிளையாடும் நியூசிலாந்து ஏ அணி கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற வுள்ளது.

இத்தொடருக்கான அணியில் ரைடருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. நியூசிலாந்து ஒருநாள் போட்டி அணியில் தற்போது ஆரம்ப ஆட்டக்காரர் வரிசைக்கு சரியான துடுப்பாட்ட வீரர்கள் இல்லாமல் அந்த அணி தவித்து வருகிறது.

மேற்படி சுற்றுப் போட்டிகளில் ஜெஸ்சி ரைடர் துடுப்பாட்டத்தில் ஜொலித்தால் நியூசிலாந்து அணியில் மீண்டும் இடம் பிடிப்பதுடன், அடுத்த ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நியூசிலாந்து, அவுஸ்ரேலியாவில் நடைபெறும் உலக கோப்பை போட்டிக்கான நியூசிலாந்து அணியில் தனது இடத்தையும் உறுதி செய்ய முடியும் என்று கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# கீர்த்தனன் நினைவு கூடைப்பந்து

## கொக்குவில், பற்றிக்ஸ் மூன்றாமிடம்

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட கீர்த்தனன் நினைவுக் கிண்ண கூடைப்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்தை சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி அணிகள் பிடித்துக்கொண்டன.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கீர்த்தனன் நினைவுக் கிண்ணக் கூடைப்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்திற்கான ஆட்டங்கள் நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 48-41 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

பெண்கள் பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதவிருந்தன. இப்போட்டியில் வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அணி சமூகமளிக்காததன் காரணமாக கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு மூன்றாமிடம் வழங்கப்பட்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்கள் நேற்றைய தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)




# இலங்கை அணிக்கு உளவியல் ஆலோசகர்

(கொழும்பு)

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரின்போது இலங்கை கிரிக்கெட் அணிக்கு விளையாட்டுத்துறை உளவியல் ஆலோசகராக இங்கிலாந்தின் முன்னாள் சுழல்பந்துவீச்சாளரும், உளவியலாளருமான ஜெரெமி ஸ்னேப் என்பவரை நியமிப்பதற்கு இலங்கை கிரிக்கெட்சபை தீர்மானித்துள்ளது.

2015 உலகக் கிண்ணப்போட்டிகளுக்கு முன்பதாக இலங்கை வீரர்களினது ஆற்றல்களை அதிகரிக்கும் நோக்கில் ஜெரெமி ஸ்னேப்பை உளவியல் ஆலோசகராக நியமிப்பதற்கு தீர்மானித்ததாக இலங்கை கிரிக்கெட் சபையின் அஷ்லி டி சில்வா உறுதிபடத்தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவின் முன்னாள் களத்தடுப்பு பயிற்றுநர் ட்ரவோ பெனியை இலங்கை அணியின் களத்தடுப்பு பயிற்றுநராக நியமிப்பது குறித்தும் அவருடன் கிரிக்கெட் சபை கலந்துரையாடி வருகின்றது.

தொழில் ரீதியாக ஜெரெமி ஸ்னேப் இலங்கை வருவார் என்பதை நாங்கள் உறுதி செய்துள்ளோம். ஆனால் அவர் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் வரை அப்பதவியில் நீடிப்பாரா என்பது குறித்து நாங்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை என அஷ்லி டி சில்வா குறிப்பிட்டார். சுழல்பந்துவீச்சாளராக இங்கிலாந்து அணியில் இடம்பெற்ற ஜெரெமி ஸ்னேப், 10 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் ஒரு சர்வதேச இருபதுக்கு 20 போட்டியிலும் விளையாடியிருந்தார். ஆனால் 121 முதல் தரப் போட்டிகளில் விளையாடிய அனுபவம் ஸ்னேப்புக்கு இருக்கின்றது. அர்ஜுன ரணதுங்க தலைமையில் 1996 உலகக் கிண்ணத்தை வென்றெடுத்து இலங்கை அணி வீரர்கள் மத்தியில் இருந்த வெற்றி பெறுவதற்கான வைராக்கியம் போன்று உலகக் கிண்ணப் போட்டிக்குத்தெரிவாகும் வீரர்கள் மத்தியிலும் வெற்றிபெறுவதற்கான வைராக்கியத்தை ஏற்படுத்துவது அவசியம் என்பதை இலங்கை கிரிக்கெட் சபை புரிந்துகொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

## நவிண்டில் கலைமதியின் மாபெரும் கால்பந்து

# சாவற்கட்டு மகாத்மா, வதிரி பொம்மர்ஸ் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்

(நெல்லியடி)

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு சாவற்கட்டு மகாத்மா மற்றும் வதிரி பொம்மர்ஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டப் போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகினறது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் சாவற்கட்டு மகாத்மா அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் விளைவாக இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மகாத்மா அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வதிரி டைமன்ஸ் அணியும் பொம்மர்ஸ் அணியும் மோதின. இதில் முற்பாதி ஆட்டத்தில் டைமன்ஸ் அணியும் பிற்பாதி ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியும் ஒவ்வொரு கோலைப் போட்டுக் கொண்டன. இதன் பின்னர் வெற்றிக் கோலைப் பெற்றுக்கொள்ள இரு அணிகளும் முழு வீச்சில் செயற்பட்டபோதிலும், இரு அணிகளின் முயற்சிகளும் பிற்கள வீரர்களால் முறியடிக்கப்பட்டன. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் வதிரி பொம்மர்ஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேவேளை, இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும், கிண்ணம் வெல்லும் அணிக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன், சிறந்த கோல் காப்பாளர் விருதுகளும் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (12)

# எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே வடக்கில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு: தெற்கில் குதூகலம்

- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.



கடந்த 24.10.2014 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மக்கள் நலன்சார் விடயங்கள் அதிகளவான மக்களின் கவனத்தை பெற்றுள்ளன. சம்பள உயர்வுகள் அரச உத்தியோகத்தர்களின் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

அதேசமயம் அடுத்த ஆண்டு ஆரம்பத்திலேயே வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கான நகர்வுகளே இவை என்கின்ற விமர்சனங்களிலும் உண்மைகள் இல்லாமலில்லை.

மலையகக் கட்சிகளில் பெரும்பாலானவை ஜனாதிபதி மகிந்தவுக்கே தமது ஆதரவை வழங்கும் முடிவுக்கு வந்திருக்கின்றன. பிரதியமைச்சர் திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கமும் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பொறுத்தவரை வழமையான ஏகாதிபத்திய யூ.என்.பி.சார்பு நிலைப்பாடுதான் எடுக்கப்படும் என்றாலும் அதனை இன்னும் சிறிது காலத்துக்கு சஸ்பென்சாக வைத்திருக்கவே விரும்புகின்றனர். இது பற்றி பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் "ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில் அது தொடர்பாக எவ்விதமான முடிவுகளும் இது வரையில் மேற்கொள்ளவில்லை" என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. உரிய காலத்தில் மக்கள் கருத்துக்களைப் பெற்று அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நகர்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் விளாசியிருக்கின்றார்.

வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் வழமையாக தேநீர் விருந்துபசாரமொன்றை ஜனாதிபதி வழங்குவது வழமையாகும்.

இந்த தேநீர் விருந்துபசாரத்தில் ஐ.தே.க., ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் பங்கேற்கவில்லை.. இவை ஜனாதிபதியின் விருந்துபசாரத்தை புறக்கணித்துள்ளன. இது வரவு செலவுத் திட்டம் சம்பந்தமான வெளிப்பாடுகள் என்பதை விட எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை மனதில்கொண்டே இத்தகைய அணுகுமுறைகள் வெளிக் காட்டப்படுகின்றன எனலாம்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டுள்ளது. வழமைபோல கொழும்பில் சிங்களத் தலைவர்களுடன் குடியும் கும்மாளமும் வடக்கு கிழக்கிலோ வாய்வீச்சுப் போராட்டம் என்பதாக நடந்தேறியிருக்கின்றது.

ஜனாதிபதியின் விருந்துபசாரம் ஒன்றில் கடந்த வருடம்கூட சிக்கன் காலுடன் சம்பந்தர் ஜனாதிபதி யருகே அமர்ந்து விருந்துண்ட படங்கள் பரவலாக வெளியாகின. இந்த வரவு செலவுத் திட்ட தேநீர் விருந்துபசாரத்தில் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் உள்ளிட்டோர் ஒரே மேசையில் அமர்ந்திருந்தனர். ஜனாதிபதி மகிந்த இரா.சம்பந்தனின் தோளில் கை போட்டபடியே மாவை சேனாதிராசாவுக்கு கைலாகு கொடுத்து அமர்க்களப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் விருந்தில் குதூகலித்த சுரேஷ் பிரேமச்சந்திரன் பல்பொடி விளம்பரத்துக்கு போஸ் கொடுத்ததுபோல் அமர்ந்திருந்தார். சிலவேளை இதுதான் இப்போதெல்லாம் கூட்டமைப்பு அரசியல் வாதிகள் அடிக்கடி உச்சரிக்கும் இராஜதந்திரப் போரோ தெரியாது.

அட, இந்த இராஜதந்திரத்தை ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்த போது களமிறக்கியிருக்கலாமே?

1990 ஆம் ஆண்டிலிருந்து யுத்தம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த யாழ்தேவி புகையிரத சேவை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. 24 வருடங்களுக்குப் பின்னர் புகையிரத சேவையை கொண்டு வந்ததற்காக யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதியை இந்த மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கலாமே? அதை ஏன் இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர் செய்யவில்லை?

வடக்குக்கு வந்தால் இந்த சுரேசின் முகத்தில் ஒரு ஈ கூட ஆடாது. கடுகடுப்பாக முகத்தை வைத்துக்கொண்டு பொலிஸ் இராணுவ சிப்பாய்களுடன் சிண்டு முட்டி அதை வீடியோவும் எடுத்து வெளியிடுவார்கள். மாவையோ அடுத்த போராட்டத்துக்கு வேட்டியை மடித்துக் கட்டாத குறையாக அறைகூவல் விடுப்பார்..

அத்தோடு ஜனாதிபதி தலைமை தாங்கும் மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களுக்கு பகிஸ்கரிப்பு. ஆனால் அலரிமாளிகையில் மட்டும் இந்த ஆரவாரங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு விருந்துண்டு மகிழ எப்படியப்பா உங்களால் முடிகின்றது? அந்த சிவாஜிகணேசன் கூட தோற்றுப்போகும் இந்த நடிப்பை எங்கேதானப்பா கற்றுக் கொண்டீர்கள்?

மக்களின் வாக்குகளில் கிடைக்கின்ற பதவிகள் உங்களது சுகபோகங்களுக்கு மட்டுமே பயன்படுகின்றதே? மாதாந்த சம்பளங்கள், படிப்பணங்கள், வரிச்சலுகை பெற்ற சொகுசு வாகனங்கள் பாதுகாப்பு பரிவாரங்கள், கணனிகள், ஓய்வூதியங்கள், வாய்ப்பு வசதிகள், செல்வாக்குகள், சிவத்த பாஸ்போட்டுகள் மற்றும் சிங்கள அமைச்சர்கள் ஒவ்வொரு பருவ காலத்திலும் வழங்கும் முதல்தர தேயிலை, தரம்மிக்க மாசிகருவாடு, மற்றும் கறுவா, கராம்பு அடங்கிய பாராளுமன்ற உறுப்புரிமைக்கான சந்தோசபொதிகள் இவற்றிலெல்லாம் சிங்கள நாற்றம் இருப்பதில்லை.

இவற்றையெல்லாம் பகிஸ்கரிக்க வேண்டும் என்று ஒருபோதும் உங்களுக்கு தோன்றுவதுமில்லை. ஆக உங்கள் வாழ்க்கைக்கும் வளத்துக்கும் இவையெல்லாம் அவசியம். ஆனால் தமிழ் மக்களுக்கு கிடைக்கும் அபிவிருத்திகள் மட்டும் உங்களுக்கு தீண்டத்தகாதவை.

உரிமைகள் உரிமைகள் என்று அழிந்தது போதாது மக்கள் இன்னுமின்னும் வறுமையிலும் சிறுமையிலும் கிடந்து உத்தரிக்க வேண்டும் என்பதே உங்கள் கொள்கை. மாறாக மக்களின் அன்றாட பிழைப்புக்காக அரசுடன் உறவுபேணி அரசியல் செய்பவர்கள் பெரும் துரோகிகள்.

மக்களுக்கு புகையிரதம் வந்தாலென்ன, பஸ் வண்டி ஓடினாலென்ன, வீதி போடப்பட்டாலென்ன, குளங்கள் திருத்தப்பட்டாலென்ன, பாடசாலைகள் நூல் நிலையங்கள் இருக்கிறதா? இல்லையா? உங்களுக்கு ஒரு கவலையுமே இல்லை. அதுபற்றி கவலையுறுபவன் காட்டிக்கொடுப்பவன் தமிழ்த்துரோகி...

இதுபற்றியெல்லாம் எமது மக்கள் சிந்திக்கத் தொடங்காதவரை உங்கள் காட்டில் மழைதான்.

# தலை வணங்கிய மன்னன்

[சீன நாட்டுக்கதை]



கொடுங்கோலனான செங்கிஸ்கான் சீனா மீது படையெடுத்துச் சென்றான்.

அப்போது அவனது குதிரைப் படையினர் துரத்த, குழந்தைகளை அள்ளிக் கொண்டு அங்கிருந்த பெண்கள் ஓடிக் கொண்டிருந்தனர்.

அங்கு இடையில் ஒரு குழந்தையைத் தூக்கி மூத்த குழந்தையை ஓடவிட்டு ஒரு தாய் ஓடிக் கொண்டிருந்தாள். ஓடிய குழந்தை காலிடறிக் கீழே விழுந்தது. அவளோ இடையில் இருந்த குழந்தையைக் கைவிட்டுப் பெரிய குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

இதைப் பார்த்த செங்கிஸ்கான் அவளை இழுத்து வரச் சொன்னான்.

"நீ விட்டுவிட்டு ஓடியது உன் பக்கத்துவீட்டுப் பெண்ணின் குழந்தைதானே? உண்மையைச் சொல்" என்றான் கத்தி முனையில்.

"இல்லை அரசே... நான் விட்டுவிட்டுச் சென்றதுதான் என் குழந்தை, இது இறந்து போன பக்கத்து வீட்டுக்காரியின் குழந்தை. அவளிடம் நான் அவளது குழந்தையைக் காப்பாற்றுவதாக வாக்குறுதி அளித்திருந்தேன். எனவே என் வாக்குறுதியைக் காப்பாற்ற என் குழந்தையை விட்டுவிட்டு அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடினேன்" என்றாள் அப்பெண்.

செங்கிஸ்கான் அவள் சொல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் தொடர்ந்து, "என் குழந்தை கடவுள் அளித்தது. இந்தக் குழந்தையை அளித்தது தர்மம். கடவுளை விடப் பெரியது தர்மம்." என்று சொன்னாள்.

"தாயே... உன்னைப் போன்றவர்கள் இருக்கும் வரை இந்த மண்ணை நான் ஒருபோதும் வெல்ல முடியாது" என்று அவள் முன் செங்கிஸ்கான் தலை வணங்கினான்.

# சினிமா சினிமா

● தீபாவளி வெளியீடுகளையடுத்து "ஐ", "லிங்கா" ஆகிய மெகா பட்ஜெட் படங்கள் வெளிவருவதால் பல சிறு முதலீட்டுப் படங்களின் வெளியீடு ஜனவரி மாதத்துக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளன. விஜய்யின் "கத்தி", விஷாலின் "பூஜை" படங்களின் தாக்கம் நவம்பர் மாதத்தின் மத்தி வரை இருக்கும் என கருதப்படுகிறது. இதை யடுத்து தமிழ் சினிமா வரலாற்றிலேயே அதிக பட்ஜெட்டில் உருவாகியுள்ள "ஐ" நவம்பர் மாத இறுதியில் வெளியாகிறது. இதன் தாக்கம் டிசம்பர் மாத மத்தி வரை இருக்கும். "லிங்கா" படத்தை ரஜினியின் பிறந்த நாளான டிசம்பர் 12ஆம் திகதி வெளியிட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. கௌதம் வாசுதேவமேனன் இயக்கும் அஜித் படம் பொங்கலுக்கு வெளிவர உள்ளது. கமலின் "விஸ்வரூபம் 2", "உத்தம வில்லன்", "பாபநாசம்" படங்களில் ஏதாவது ஒரு படம் பொங்கல் விருந்தாக திரைக்கு வரலாம். தனுஷ் நடிக்கும் "அநேகன்", ஆர்யாவின் "மீகாமன்", சிவகார்த்திகேயனின் "காக்கிச் சட்டை", விஜய் சேதுபதியின் "இடம் பொருள் ஏவல்" ஆகிய படங்கள் ஜனவரிக்குப் பிறகே வெளிவருகின்றன.

இணைந்து நடித்து, அப்படம் விற்பனையாகும் பணத்தில், நடிகர் சங்க கட்டடத்தை கட்டுவதாக கூறியிருக்கிறார். ஆர்யா, ஜீவா, ஜெயம்ரவி மற்றும் கார்த்தி ஆகியோரும் அவருக்கு கை கொடுப்பதாக கூறியிருக்கும் நிலையில், தற்போது, விஜயசேதுபதி, சிவகார்த்திகேயன், ஹன்சிகா போன்றோரும் அப்படத்திற்கு பணமே வாங்காமல் நடித்து தருவதற்கு முன் வந்துள்ளனர்.

● தான் இசையமைக்கும் படங்களில் நடிக்கும் நடிகர், நடிகைகளை பின்னணி பாட வைக்கிறார் இமான். ஜில்லாவில் விஜய்யை பாட வைத்தவர், என்னமோ ஏதோ படத்தில் ஸ்ருதிஹாசனையும், பாண்டியநாடு படத்தில் ரம்யா நம்பீசனையும், வருத்தப்படாத வாலிபர் சங்கத்தில் சிவகார்த்திகேயனையும் பாட வைத்தார். இப்போது ரோமியோ ஜூலியட் படத்துக்காக பொலிவுட்டின் முன்னணி இசையமைப்பாளர்களில் ஒருவரான, விஷால் தலானியை, ஒரு பாடல் பாட வைத்திருக்கிறார் இமான்.

● "தாணா" படத்தில் நடித்தபடியே அடுத்த படத்துக்கு தயாராகி விட்டார் சிவகார்த்திகேயன். படத்துக்கு "ரஜினி முருகன்" என பெயரிடப்பட்டுள்ளது. "வருத்தப்படாத வாலிபர் சங்கம்" இயக்கிய பொன்ராம் இயக்குகிறார். இதில் ரியல் எஸ்டேட் புரோக்கராக வேட்டி, கூலிங் கிளாஸ், அக்குளில் கைப்பை, அசட்டுத்தன

# மலையகப் பேரவலம்

**2004** டிசம்பர் சுனாமிக்குப் பின்னர் இலங்கையில் நிகழ்ந்த பேரவலம் இது எனலாம்.

பதுளை ஹல்திமுல்ல கொஸ்லாந்த பகுதியில் 120 வீடுகள் அள்ளிச் செல்லப்பட்டிருக்கின்றன. 150 இற்கு மேற்பட்டோர் மண் சரிவில் சிக்கியிருக்கிறார்கள். பலர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மீட்புப்பணி அடைமழை மோசமான காலநிலையின் மத்தியில் சிரமத்துடன் முன்னெடுக்கப்படுகிறது.





3 கிலோமீற்றர் சுற்றளவுள்ள ஒரு கிராமமே அழிந்து போயிருக்கிறது.

இவ்வாறான பாரிய அனர்த்தத்திற்கான சாத்தியங்கள் பற்றி சூழலியல் விஞ்ஞானிகள்-ஆர்வலர்கள் தொடர்ந்து எச்சரித்து வந்திருக்கிறார்கள்.

பாரிய அணைக்கட்டுத் திட்டங்கள் மக்களின் இருப்பை உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

சாதாரணமாக மிதமிஞ்சி தேக்கமடையும் நீர் மலைபோன்ற பிரமாண்டங்களையே கரைத்தழித்து விடும் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

அதிகாலையில் தோட்டங்களுக்கும் - வேறு வேலைகளுக்கு சென்றவர்களும் பாடசாலைக்குச் சென்ற மாணவர்களும் தவிர வீட்டில் இருந்தவர்களே பெருமளவிற்கு இந்த அனர்த்தத்திற்குப் பலியானார்கள்.

மலையக மக்களின் வாழ்வு இன்றளவில் கடினமானதாகவே இருக்கிறது 2 நூற்றாண்டுகளை அடையும் நிலையில் அடிப்படையான வாழ்க்கைநிலையில் பாரிய மாற்றங்கள் நிகழவேண்டியிருக்கிறது.

இதனிடையே ஒரு பிரபல தேயிலைத்தொழில் முதலாளி ஒருவர் அண்மையில் கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தாங்கள் வழங்கும் ஊதியம் அதிகம் என்றும் தங்களுக்கு நஷ்டம் என்றும் அழுது வடித்துள்ளார்.

1 கிலோ தேயிலை உற்பத்தி செய்ய 3 டொலர் செலவாகிறதென்றும், சர்வதேச சந்தையில் கென்யா - இந்தியா போன்ற நாடுகளின் தேயிலை இலங்கைத் தேயிலையை விட 20 வீதம் குறைந்த விலையிலேயே விற்பதாகவும், தேயிலை ஏற்றுமதி செய்யும் இந்தியா- கென்யா போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் தாம் அதிக ஊதியம் வழங்குவதாகவும், தொழிலாளர்கள் குறைந்தளவு உற்பத்தித் திறனையே காட்டுவதாகவும், சூழலியல் காலநிலை காரணங்களால் வேலைசெய்யாத நாட்களுக்கும் சம்பளம் வழங்குவதாவும் இந்த சுரண்டல் பேர்வழிகள் பாசாங்கு பண்ணுகிறார்கள்.

நவதாராளவாத உலகைச் சேர்ந்த இந்த முதலாளிகள் தமது சௌகரியத்திற்காகத்தான் இந்த நாடு. மற்றவர்கள் தங்கள் பரோபகாரத்தில் பிராணிகள் போல் ஒடுங்கி வாழவேண்டும் என்று கருதுகிறார்கள் போலும். இந்த கிறிமினல் முதலாளிகள் ஆய்வாளர்கள்-கல்வியாளர்கள் போல் நவதாராளவாத ஊடகங்களில் சித்தரிக்கப்படுகிறார்கள். நியாயமானவர்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள்

"பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பது குரூரமாக உணர்த்தப்படுகிறது.

எத்தகைய பாரதூரமான பிரச்சினைகள் இருப்பினும் 30 களில் சர்வசன வாக்குரிமையையும், இலவசக் கல்வியையும் அறிமுகப்படுத்திய நாட்டில் - கீர்த்திமிக்க தொழிற்சங்க இயக்க வரலாறு கொண்ட நாட்டில்- சமூக அநீதிகளுக்கெதிரான கிளர்ச்சிகள் நிகழ்ந்த நாட்டில் இத்தகைய பேச்சுக்கள் சகித்துக் கொள்ளமுடியாதவை.

இன்னும் சிலமாதங்களில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை பற்றிப் பேச வேண்டியிருப்பதால் முன்கூட்டிய வெளிப்படுத்துகை இது.

இலங்கையில் பொது அறங்களாக இருத்தலை மீளப்பெறுதல்தானம் செய்யப்படவேண்டும்.

தேயிலை ஏற்றுமதி யாருக்காக? விரலிவிட்டு எண்ணக் கூடிய சிலருக்காகவா?

அல்லது இலங்கையின் பெருவாரியான மக்களின் நன்மைக்காகவா?

மலையக மக்களின் வீடு - குடிநீர் - மின்சாரம் என்பனவற்றுடன் பாதுகாப்பான வாழ்க்கை என்பது இப்போது சவாலான விடயமாக உருவெடுத்துள்ளது.

இது தனியே இலங்கையர்களான எமது பிரச்சினை மாத்திரமல்ல. நாம் தென்னாசிய அளவில் இந்த சவால்களை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். எமது மட்டு - அம்பாறை வெள்ளம், வடபகுதியில் நிசாப்புயல், ஒரிசா வெள்ளம், கடலூர் புயல் அழிவு, பிகார் வெள்ளம், அடிக்கடி நிகழும் வங்க வெள்ளப்பெருக்கு, பத்திரிநாத் கேதார்நாத்தின் உருத்திர தாண்டவம், ஜப்பானின் புகுசீமா உயிர் இழப்புக்களும் சமகால அனுபவங்கள்.

காத்திருக்கும் பேரழிவு பற்றிய பிரக்ஞை இல்லாமலே ஓடிக்கொண்டிருக்கிறோம். சவால்களை எதிர்கொள்ள நாம் நியாயமான முறையில் தயாராகவில்லை.

நவதாராளவாத உற்பத்தி உறவு முறை சமூக பாதுகாப்பு பற்றி அக்கறை கொண்டதல்ல. இயற்கை பேரழிவு பற்றி அதற்கு எந்த பிரக்ஞையும் இல்லை.

அந்த அதிகாலை 7.30 மணிக்கு ஊரே அழிந்துவிடும் என்று யாரும் கற்பனை செய்திருக்கவில்லை.

2004 சுனாமி இலங்கையின் கரையோர வாழ்வை காவு கொள்ளவில்லையா? இப்போது மலையகத்தின் வாழ்வு!

மிகவும் நெருக்கடியான இந்த தருணத்தில் மலையக அரசியல் தலைமைகள் - இலங்கையின் அனைத்து அரசியல் சமூக சக்திகள் - அரசு உட்பட இணைந்து செயற்பட வேண்டும்.

புலம்பெயர் சமூக அக்கறையாளர்களும் மக்களும் இதில் பாரிய பங்காற்றலை வழங்கமுடியும்.

**சுகு-ஸ்ரீதரன்**

---

ஜனவரிக்குப் பிறகே வெளிவருகின்றன.

◉ "தலைநகரம்", "மருதமலை". "படிக்காதவன்", "மாப்பிள்ளை" ஆகிய படங்களை இயக்கிய சுராஜ் அடுத்து இயக்கும் படத்தில் ஜெயம் ரவி ஹீரோவாக நடிக்கிறார். படத்துக்கு "அப்பாடக்கர்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. சர்ச்சைகளுக்குப் பின் இப்படத்தின் மூலம் தமிழுக்கு வருகிறார் அஞ்சலி. மற்றொரு கதாநாயகி த்ரிஷா.

◉ தங்களைப் பற்றி வெளிவரும் செய்திகளின் உண்மைத்தன்மை குறித்து ஃபேஸ்புக் மற்றும் டிவிட்டர் பக்கங்களில்



உடனடியாக பதிவு செய்து வருவதில் சித்தார்த், குஷ்பூ, விஷால், இலியானா, ரீமா கல்லிங்கல், தமன்னா, ஸ்ருதி ஆகியோர் பிரபலமாக உள்ளனர். ஆனால் தற்போதுதான் தனது ஃபேஸ்புக் கணக்கை தொடங்கி இருக்கிறார் "பூ" பார்வதி. "கமலுடன் "உத்தம வில்லன்" படத்தில் நடித்தது என் முழு சினிமா வாழ்க்கைக்குமான அனுபவங்கள். "மரியான்" படத்தில் எனது நடிப்பு பாராட்டப்பட்டது. நான் பார்த்து வந்ததில் தனுஷ் நல்ல கலைஞர். ஃபேஸ்புக்கில் எனது சினிமா குறித்த செய்திகளை மட்டுமே வெளியிடுவேன். 10 வருடங்களில் 8 படங்களில் மட்டுமே நடித்திருக்கிறேன். எனக்கு பணம் முக்கியமில்லை. நல்ல கதைகள்தான் முக்கியம்" இப்படி தனது முதல் செய்தியை பகிர்ந்துள்ளார் "பூ" பார்வதி.

◉ "நடிகர் சங்க கட்டடத்தை கட்டியே தீருவோம்..." என்று தொடர்ந்து குரல் கொடுத்து வரும் விஷால், அடுத்த ஆண்டில், ஒரு படத்தில் சில நடிகர்களுடன்



கும் வியாபாரப் பேச்சு என வித்தியாசமான தோற்றம் சிவகார்த்திகேயனுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

◉ சினேகா கர்ப்பமாக இருப்பதாக சமீபத்தில் வெளியான செய்தியை மறுத்துள்ளவர், "சினிமாவில் தொடர்ந்து நடிக்கவே ஆசைப்படுகிறேன்..." என்று கூறியுள்ளார். தற்போது தமிழில் படமே இல்லாத அவர், தெலுங்கில் அல்லுஅர்ஜுன், சமந்தா நடிக்கும் படத்தில் சமந்தாவுக்கு அக்கா வேடத்தில் நடிக்கிறார்.

◉ "தசாவதாரம்" படத்தில் வைரஸ் குப்பி அடங்கிய பெட்டியை வயதான பாட்டி தோற்றத்தில் இருக்கும் கமலிடமிருந்து பெறுவதற்காக ஹீரோ கமல், எபோலா - மார்பர்க் வைரஸ் இணைந்த ஆபத்தான பயோ ஆயுதம் குப்பிக்குள் இருப்பதாகக் குறிப்பிடுவார். தற்போது எபோலா காய்ச்சல் உலகை பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

◉ அரண்மனை படத்தில் ஹன்சிகாவின் ஆவேச நடிப்பைப் பார்த்து ஒரு இயக்குநர், அவரை மையப்படுத்தி, ஒரு ஆக்ஷன் கதையை தயார் செய்து கொண்டிருக்கிறார்.

◉ சந்தகுமாரன்" படம், என் மார்க்கெட்டை புரட்டிப்போடும் என்கிறார் பிந்துமாதவி.

◉ சினிமாவில் நடித்துக் கொண்டே பின்னணியில் பாடி வரும் ஆன்ட்ரியா, ஒரு தமிழ்ப் படத்துக்கு இசையமைக்க உள்ளதாக கூறப்படுகிறது.

◉ "இங்கிலிஷ் விங்கிலிஷ்" படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்த நவிகா "முருகாற்றுப்படை" படத்தின் மூலம் கதாநாயகியாகிறார்.

---

## பயனுள்ள மருத்துவ குறிப்புகள்

◆ இடுப்பு வலியால் அவதியா? முருங்கை இலையைப் பறித்து உப்புச் சேர்த்து அரைத்து சாறு பிழிந்து பிடிப்புள்ள இடத்தில் தடவினால் பிடிப்பு விட்டுவிடும்.

◆ இஞ்சியை அரைத்து கனமாக பற்றுப் போட்டால் தலைவலி சிறிது நேரத்தில் குணமாகும்.

◆ தேனீ கடித்த இடத்தில் மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்து போட வலியும் வீக்கமும் பறந்துவிடும்.

◆ பித்த வெடிப்பிற்கு கடுக்காயைத் தண்ணீர்விட்டு உரசி விழுதை வெடிப்பு உள்ள இடத்தில் தடவி வந்தால் வலியும் வெடிப்பும் மறையும்.

◆ மூலம், வாயுத்தொல்லை, மாலைக் கண் நோய் உள்ளவர்கள் அடிக்கடி முருங்கைக் கீரை சாப்பிடுவது நல்லது.

◆ பப்பாசிச் செடியின் பாலை வலிக்கும் பல் மீது தடவிவந்தால் பல்வலி குணமாகும்.

◆ ஒரு கப் தயிர் தினமும் சாப்பிட்டால் அல்சர் நெருங்காது.

◆ பூண்டை ஒவ்வொருநாள் உணவிலும் சேர்த்துக் கொண்டால் வயிற்றிலும் குடலிலும் ஏற்படும் புண்கள் ஆறும்.



# வடக்கு நோக்கிய ஜனாதிபதியின் பயணம் ஒரு வெட்டு முகப்பார்வை

**நடந்து முடிந்த ஜனாதிபதியின் வடக்கு விஜயம் தொடர்பான மீளாய்வு அறிக்கை ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டிருந்தார். அதில் இருந்து சில பகுதிகளை இங்கே தருகிறோம்.**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வடமாகாணம் நோக்கிய வருகை வெற்றிகரமாக அமைய வேண்டும் என்றும் அவரது வருகையின் வெற்றி வட பகுதி தமிழ் பேசும் மக்களுக்கும் பயன்களைத் தர வேண்டும் என்றும் நான் பகிரங்கமாகவே எமது மக்களுக்கு கூறியிருந்தேன்.

நினைத்தது போலவே எல்லாம் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. ஜனாதிபதியை வடக்கு நோக்கி வருமாறு நானே அழைத்திருந்தேன். அதேபோல் அவரை வரவேற்க வருமாறு வடபகுதி மக்களுக்கும் நானே அறைகூவல் விடுத்திருந்தேன். வழமை போல, தமிழ் பேசும் மக்களின் மகிழ்சசியை விரும்பாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், வட மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஜனாதிபதியின் வருகையை தாம் பகிஷ்கரிப்பதோடு மக்களையும் எதிர்ப்புக் காட்டி புறக்கணிக்குமாறு அறிவித்திருந்தனர்.

ஆனாலும் எனது அழைப்பை ஏற்று தமிழ் பேசும் மக்கள், அலை அலையாக திரண்டு வந்து, மகிழ்ச்சி ஆரவாரத்தோடு ஜனாதிபதியை வரவேற்றார்கள். எமது அறைகூவலுக்கான நோக்கத்தையும் மக்கள் புரிந்து கொணடுள்ளார்கள். சுயலாப அரசியல்வாதிகளின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கருத்தை தமிழ் பேசும் மக்கள் இனியும் ஏற்க மாட்டார்கள் என்பதே இதன் அடையாளமாகும்.

உறவுக்கு கரம் கொடுத்து, மதிநுட்ப சிந்தனையின் வழி நின்று உரிமைக்கு குரலும் கொடுப்பதன் மூலமே நாம் உரிமை முதற்கொண்டு சகலதையும் பெற முடியும். இந்த நடைமுறை யதார்த்த வழியிலான எமது கொள்கை மீதான நம்பிக்கை இன்று எமது மக்கள் மத்தியில் வலிமை பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றது.

**உடனடி நன்மைகள் என்ன?**

காணி உரிமம் அற்ற 22 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட எம் மக்களுக்கு காணி உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

யாழ்.தேவியின் யாழ்ப்பாணம் நோக்கிய வருகை தமிழ் பேசும் மக்களுக்கு தேவையில்லை என்று, அதற்கு எதிர்ப்புக் காட்டும் சுயலாப அரசியல் கட்சிகள் அதை வட பகுதி தமிழ் பேசும் மக்களின் கருத்து கணிப்புக்கு விட்டுப் பார்க்கட்டும்.

யாழ். தேவியின் யாழ் நோக்கிய வருகை தேவையா? இல்லையா? என்பதை தீர்மானிக்க வேண்டியவர்கள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான இலகுவானதும் விரைவானதும் குறைந்த செலவானதுமான பயணத்திற்காக காத்திருக்கும் மக்களே அன்றி, வட மாகாண சபையை பெற்றுக கொண்டதும் தாம் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் சென்று வருவதற்கான விமான கட்டணத்தை அரசாங்கம் சலுகை அடிப்படையில் குறைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அல்ல.

**எதிர்பார்த்த வெற்றி கிட்டியது**

'சீப்பை ஒழித்தாலும் திருமணம் தடைப்படாது' என்பது போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பாவிட்டாலும் ஜனாதிபதியின் வருகையும், வட மாகாண மாவட்டங்களின் விசேட அபிவிருத்தி மீளாய்வு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் வெற்றிகரமாகவே நடந்து முடிந்திருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இது போன்ற சுயலாப வறட்டு பிடிவாதங்களாலும், ஆற்றல் இல்லாமையினாலும், விருப்பம் மற்றும் அக்கறை இல்லாமையாலும் வட மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி திறைசேரிக்கு திரும்பிச் செல்லப்போகின்றது.

அது குறித்து இவர்கள் கவலைப் படவில்லை. ஆனால் பாதிக்கப்படப் போவது எமது வாழ்விடமும், எமது மக்களுமேயாவர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விசேட அபிவிருத்தி மீளாய்வு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வட மாகாண முதலமைச்சரும், கூட்டமைப்பினரும் கலந்து கொண்டிருந்தால் வட மாகாணத்திலிருந்து பெருந்தொகை நிதி ஏன் திறைசேரிக்குத் திரும்புகின்றது என்ற கேள்வி அங்கு கேட்கப்பட்டிருக்கும்.

இரணைமடுவிலிருந்து கிளிநொச்சி விவசாயிகளுக்கு தேவையான நீரை வழங்கி, மேலதிக நீரை அங்கிருந்து பளை, பூநகரி மற்றும் யாழ்ப்பாணத்திற்கும் குடி நீராகக் கொண்டுவரும் திட்டத்தை தமது சுயலாப அரசியல் ஆதாயத்திற்காக தடுக்கும் கூட்டமைப்பினரை கருத்தில் எடுக்காமல், அதனை அமுல்படுத்த விரைவான விசேட நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுக்க வேண்டும்.

**தேசம் நிமிர, மக்களின் வாழ்வு செழிக்க!....**

தேசத்தின் மகுடம் என்ற சமூக பொருளாதார வாழ்வியல் அபிவிருத்தி திட்டத்தை அரசாங்கம் மாகாணங்கள் தோறும் அறிமுகப்படுத்தியும் நடைமுறைப்படுத்தியும் வருகிறது.

கல்வி, காணி உரிமம், வீடமைப்பு, மீள் குடியேற்றம், வீதி புனரமைப்பு, நீர் வழங்கல், சுகாதாரம், மின்சக்தி, நெடுஞ்சாலை, போன்ற உட்கட்ட மைப்பு வசதிகளை கட்டியமைக்கும் திட்டத்தை கொண்டதான தேசத்தின் மகுடத்தை நாம் வட மாகாணத்தில் எமது தேவைக்கு ஏற்றவாறும், அழிவு களில் இருந்து மேலும் எமது தேசத்தை தூக்கி நிறுத்துவதற்காகவும் பயன் படுத்த வேண்டும்.

ஆகவே 2016ஆம் ஆண்டில் 'தேசத்தின் மகுடம்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தை வட மாகாணத்தில் ஜனாதிபதி நடைமுறைப்படுத்த வேண்டும்.



காணியும் 647 வீடுகளும் போர் முடிவுற்றதன் பின்னர் மக்களிடம் படையினரால் இதுவரை கையளிக்கப்பட்டமைக்கும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதோடு, தேசிய பாதுகாப்பை கருத்தில் எடுத்து கட்டம் கட்டமாக காணிகளை உரியவர்களிடம் கையளிப்பதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை ஏற்கெனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான மேலதிக வாழ்வாதார வசதிகளை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் நான் ஜனாதிபதியின் கவனத்துக்கு தெரியப்படுத்தியிருக்கின்றேன்.

**எமது மக்கள் வாழ்வியல் எழுச்சி பெற!**

102816 பேர் வட மாகாணத்தில் சமுர்த்தி உதவி பெறுகின்றார்கள். அதனை மீளாய்வு செய்து 125000 ஆக அதிகரிப்பதனால் எஞ்சிய எமது மக்களில் கணிசமானவர்கள் வாழ்வியல் உரிமைகளை பெற்று நிமிர்ந்தெழ முடியும். இல்லாமை என்பதை முடிந்தளவு இல்லொதொழிக்கவும் முடியும். என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றேன்.

**நேசத்துக்குரிய எம் மக்களே!......**

**அரசியலுரிமை பெற்று நாம் நிமிர்ந்திட.....**

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து தொடங்கி,அதைச் செழுமைப் படுத்தி மேலும் அதிகாரங்களை பெற்றுக்கொள்வதன் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் இதனையே நாம் ஜனாதிபதியிடம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். இதே வேளை அரசியல் தீர்விற்கான ஆரம்பத்தளமாக நாடாளுமன்ற தெரிவுக் குழுவை பயன்படுத்தவும் நாம் தயாராக இருக்கின்றோம்.

4ஆயிரத்திற்கும் அதிகமான அரச ஊழியர்களுக்கு மிகக்குறைந்த விலையில் முதற்கட்டமாக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

யுத்தத்தில் பாதிப்படைந்த 1300இற்கு மேற்பட்டவர்களுக்கு இன்னொரு கட்டமாக மனிதநேய உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. புலிகளின் வங்கியில் நகைகளை வைப்பில் இட்டவர்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு முதற்கட்டமாக அரசினால் நகைகள் மீளக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வட பகுதி மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோகில் மேலும் 75 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

428 எச்.என்.டி.ஏ பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருககின்றன.

25 இலட்சம் ரூபா செலவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் புனரமைககப்பட்டு யாழ். மக்களின் தொடர்ச்சியான பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவை எல்லாம் ஜனாதிபதியின் வருகையை ஒட்டிய ஒரு நல்லெண்ண சமிக்ஞைகளாகவே செய்யப்பட்டன. இது போன்ற பணிகள் இன்னமும் தொடரவிருக்கின்றன. எனது வேண்டுகோளை ஏற்று 24 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் நோக்கி யாழ்.தேவியை ஜனாதிபதி அழைத்து வந்திருந்தார்.

ஜனாதிபதியின் வடக்கு நோக்கிய வருகையைப் போல் யாழ்.தேவியின் யாழ்ப்பாணம் நோக்கிய வருகையும் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான ஓர் உறவுப்பாலமாகவே அமைந்துள்ளது.

அப்போது மாகாண சபையை இயககுவதில் ஜனாதிபதியும் ஆளுநரும் தடையென்று மக்களுக்கு பொய் கூறுவது போல், அங்கு அந்த சபையில் கூறியிருக்கமுடியாது. ஆகவே தமது பொய்கள் அம்பலமாகி விடும் என்ற அச்சத்தின் காரணமாகவே இவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை.

வட மாகாண சபை ஊடாக எமது மக்களுக்கு அரசாங்கம் ஒதுக்கிய நிதியில் இருந்து தமக்கான சொகுசு வாகனங்களை வாங்குகிறார்கள். தமது ஆடம்பர மாளிகைகளுக்கு மாதா மாதம் இலட்சக்கணக்கில் வாடகை செலுத்துகின்றார்கள்.

**மக்கள் சார்பான எமது கோரிக்கைகள்**

வட மாகாண மாவட்டங்களுக்கான விசேட அபிவிருத்தி மீளாய்வு ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டத்தில் எமது மக்களின் சார்பாக ஜனாதிபதியிடம் நான் முன்வைத்த சில கோரிக்கைகளை இங்கு குறிப்பிடுகின்றேன்.

**வறட்சியில் இருந்து வடபகுதி மக்களை காக்க.......**

**முன்னாள் புலி உறுப்பினர்களின் விடுதலைக்காக...**

குறுகிய காலத்தில் 12000 திற்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வளிக்கும் முகமாக ஜனாதிபதி அவர்கள் முன்னெடுத்த செயற்பாட்டிற்கு நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளை,சிறைகளிலும் தடுப்புக் காவலிலும் இருக்கும் முன்னாள் புலி உறுப்பினர்கள் தவறான வழிப்படுத்தலுக்கு ஆளானவர்கள் என்றவகையில் அவர்களை விடுதலை செய்து, நீண்ட காலமாக சிறைவாசம் இருந்த அவர்கள் எதிர்வரும் தமிழ் மக்களுக்கான விஷேட தினங்களை ஒட்டி அவர் தம் குடும்பத்தினருடன் இணைய ஜனாதிபதி கருணையோடு வழியமைக்க வேண்டும்.

**மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தம்!**

படையினரின் பயன்பாட்டிலும், கட்டுப்பாட்டிலும் இருந்த காணிகள் பலவற்றை மீட்டுத் தந்தமைக்கும், யாழ் மாவட்டத்தில் மட்டும் 17503 ஏக்கர்

இந்த நடைமுறைச் சாத்திய வழிமுறையை பின்பற்ற முன்வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் நாம் பகிரங்கமாக அழைப்பு விடுத்து வருகின்றோம்.

கடந்த காலங்களில் கனிந்து வந்த வாய்ப்புகளை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் திட்டமிட்டே தவறவிட்டு எமது மக்களுக்கு வரலாற்று துரோகமிழைத்தது போல் அன்றி, விட்ட தவறுகளுக்கு பிராயச்சித்தம் தேட வேண்டுமேயானால் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இன்றுள்ள வாய்ப்பையேனும் எமது மக்களுக்காக பயன் படுத்த முன்வரவேண்டும்.

ஜனாதிபதியின் வடக்கு நோக்கிய வருகை உங்களுக்கு பல நன்மைகளை தந்தது. அந்த வெற்றியைப் போல் எதிர்காலத்திலும் பல வெற்றிகளையும் பயன்களையும் நீங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இனிவரும் காலத்திலும் நீங்கள் எந்தளவுக்கு எமது சுபீட்சத்தை நோக்கிய வழிமுறைநோக்கிய பாதையில் மேலும் அணிதிரண்டு முன்வருகின்றீர்களோ, அந்தளவுக்கு வெற்றிகளை உஙகள் வசப்படுத்துவதற்கும் உங்கள் உரிமை வாழ்வை மீட்டுத்தருவதற்கும நாம் அர்ப்பணிப்போடு உழைப்போம். என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# உயிர்நீத்த சகோதரர்களுக்கு ஒருங்கிணைந்து அஞ்சலி செய்வோம்

## செயலாளர் புவனேஸ்வரன் உருக்கம்

பதுளை மாவட்டம் கொஸ்லந்த மீரியபெத்த பிரதேசத்தில் ஏற்பட்ட இயற்கைப் பேரனர்த்தத்தால் உயிரிழந்த எமது உறவுகளுக்காக நாளை அனைத்துப் பாடசாலைகளிலும் காலை - 9.00 மணிக்கு ஐந்து நிமிடநேரம் அஞ்சலி செலுத்துமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள், மற்றும் பொதுமக்களுக்கு உதவும் வகையில் அனைத்து அதிபர்களையும், ஆசிரியர்களையும் தம்மாலான பங்களிப்புக்களை வழங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

உதவிகளை வழங்க விரும்புகின்ற அதிபர்கள், ஆசிரியர்களையும், மனிதாபிமானமுள்ளவர்களையும் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் கேட்டுள்ளார்.

## இரவில் ஒளிராத விளக்கு பகலில் பளிச்சென ஒளிர்கின்றது

மந்திகை ஆதார வைத்திய சாலை வாசல் அருகே பொருத்தப்பட்ட வீதி விளக்கு இரவு ஒளிர்வதை விட்டு பகலில்ஒளிர்ந்த வண்ணமுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இவ்வாறான வீதி விளக்குகளை உரியவர்கள் காலை ஆறு மணிக்காவது நிறுத்தி அரச சொத்துக்களை உரிய முறையில் உப்யோகிக்க முன்வரவேணடுமென சமூக ஆர்வலர்கள் கேட்டுள்ளனர். (150)

## பாடசாலை பௌதிகவளதேவைக்கு 3 மாடி கட்டடம் மிக அவசியம்

(மானிப்பாய்)

நவாலி சென்ற் பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலையின் பௌதீகவள தேவையை முன்னெடுக்க மூன்று மாடி கட்டடம் தேவை.

இவ்வாறு வடமாகாண முன்னாள் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த 09.07.1995 இல் தாக்கப்பட்ட நவாலி றோ.க.த.க. பாடசாலை கட்டடவசதியின்றி வலிகாமத்தில் கல்வி புலத்தில் சிறந்த வெளியீட்டை காட்டிவருகின்றது.

இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வடமாகாண கல்வி அமைச்சர் மூன்று மாடி கட்டடம் அமைத்து வழங்கவேண்டும் என கோரிக்கையை முன்வைத்தார். (05)

## முதியோர்களுக்கான தேசிய செயலகத்தால் இருவருக்கு கண் வில்லைகள் வழங்க ஏற்பாடு

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகம் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இருவருக்கு கண் வில்லைகளை அனுப்பி வைத்துள்ளது.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த இருமுதியோர்கள் கண் வில்லைகளைப் பெற உள்ளனர்.

தலா 10, 000 ரூபா பெறுமதியான கண் வில்லைகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன.கண் வில்லை தேவைப்படும் ஒருவர் அரச மருத்துவமனையில் கண் வைத்தியரிடம் மருத்துவச் சான்றிதழ் பெற்று பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தரிடம் அல்லது சமூகசேவைகள் உத்தியோகத்தரிடம் வழங்கி உரிய படிவங்களை பூரணப்படுத்த வேண்டும்.

பின்னர் இப் படிவங்கள் கொழும்புக்கு சமூக சேவைகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டு கண் வில்லை பெற்றுக் கொடுக்கப்படும் என தெரிவிக்கப் படுகின்றது. (90)

## 'என் எழுத்தாயுதம்' நூல் வெளியீடு

திசை காட்டி குழுமத்தின் அனுசரணையுடன் மூத்த ஊடகவியலாளர் என். வித்தியாதரன் எழுதிய "என் எழுத்தாயுதம்" எனும் நூல் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் திசைகாட்டி குழும இயக்குநர் சபை சிரேஷ்ட உறுப்பினர் சி. சுபசீலன் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க , நீதிஅமைச்சர் ரவூப் ஹக்கீம், வடமாகாணஎதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராஜா தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன், தமிழ்த்தேசிய கூட்டமைப்புத்தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் வெளியீட்டுரையை நிகழ்துவார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நூலை வெளியிட்டுவைக்க கொழும்பு நகரபிதா ஏ.ஜெ.எம். முஸ்மில், வீரகேசரி நிர்வாக இயக்குநர் குமார் நடேசன் தினக்குரல் நிர்வாக இயக்குநர் எஸ். பி. எஸ். கேசவராஜா நாவலர் நற்பணிமன்ற ஸ்தாபகத்தலைவர் கருணை ஆனந்தன், ரி.ரி.சென்ஸ்ரக்சன் இயக்குநர் செல்வன்.திருச்செல்வன் ஆகியோர் பிரதிகள்ள பெறஉள்ளனர். சிரேஷ்டசட்டவாளர் ஜி. இராஜகுலேந்திரா நயப்புரை நிகழ்த்தவுள்ளார். (54)

## வடமாகாண மரநாட்டு விழா

வடமாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகள் ஊடாக மரம் நாட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப் படும்.

இதன்போது கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து பசுமைப்புரட்சியை ஏற்படுத்தவேண்டும் என வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கேட்டுள்ளார்.

பாடசாலைகளுக்கான மரங்களின் தேவைகளை வடமாகாண விவசாய அமைச்சுக்கு விண்ணப்பிப்பதன் ஊடாக பெற்றுக் கொள்ளலாம் என அவர் அறிவித்துள்ளார். (05)



அச்சுவேலி, பத்தமேனி விபசி வித்தியாலயம் நீண்ட காலமாக இயங்காத நிலையில் சூழல் பற்றை புதர்கள் மண்டிக்கிடப்பதைக்காணலாம். (85)

## பதிவிறக்கப் பெட்டகம்

### 'எக்ஸைல்' நாவலில் இருந்து....

** அந்த ஊரில் உள்ள விஞ்ஞானக் கழக ஆராய்ச்சி மாணவர்கள் சிலர் உதயாவை ஒரு கலந்துரையாடலுக்கு அழைத்தார்கள். வருங்கால விஞ்ஞானிகள் என்பதால் அவர்கள் அழைப்பை ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்தான் உதயா. அவனுக்கு சர்வகலாசாலை மாணவர்கள் என்றால் ஒரு பலகீனம். அப்படியும் சொல்ல முடியாது. ஒரு துறையில் வல்லுநர்கள் என்பதால் ஏற்படும் மரியாதை. ஆறு தமிழ் மாணவர்கள். நம்ப மாட்டீர்கள்; காலை பத்து மணியிலிருந்து மதியம் இரண்டு மணி வரை விடாமல் அவர்களே பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு வார்த்தை கூட, ஒரு நிமிடம் கூட உதயாவை அவர்கள் பேசவிடவில்லை. அவர்கள் பேசியதும் விஞ்ஞானமோ இலக்கியமோ இல்லை. அவர்கள் பேசியது அரசியல் மற்றும் சமூகவியல். அதுவும் சைக்கிள் ரிக்‌ஷா ஓட்டுபவர்களும் பிளாஸ்டிக் சாமான் விற்பவர்களும் எப்படிப் பேசுவார்களோ அந்தத் தரத்தில் இருந்தது. இவர்கள் தான் வருங்கால விஞ்ஞானிகள். இவர்கள்தான் நாளை ஒவ்வொரு கல்லூரியாக, ஒவ்வொரு பள்ளிக்கூடமாகப் போய் இந்தியாவைப் பற்றிக் கனவு காணச்சொல்லி, மாணாக்கர்களின் மனத்தில் நற்கருத்துக்களை விதைக்கப் போகிறார்கள். இவர்கள்தான் நாளை இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழப் போகிறார்கள்; இவர்கள்தான் நாளை ஒரு கோடி பிரதிகள் விற்கும் 'சூரியனின் தேசம்' என்ற நூலை எழுதப்போகிறார்கள்; இவர்கள்தான் நேர்மையின் சின்னமாக விளங்கப்போகிறார்கள்; இவர்கள்தான் நாளை பாரத ரத்னா விருது பெறப்போகிறார்கள்....

ஒரு எழுத்தாளனுடன் உரையாட அவர்களிடம் எதுவுமே இல்லை. சரி, அதை விடுங்கள். ஒரு சக மனிதனை அழைத்து அவனைப் பேசவே விடாமல் நான்கு மணி நேரம் மாற்றி மாற்றி பிளேடு போடுகிறார்கள் என்றால் அவர்களை எதில் சேர்ப்பது? அவர்களுக்கு விஞ்ஞான சூத்திரங்களைத் தவிர வேறு எதுவுமே தெரியவில்லை. அப்படித் தெரியாமல் இருப்பதில் தவறே இல்லை. ஆனால் விஞ்ஞான சூத்திரங்கள் தெரிந்ததாலேயே சமூகவியலிலும் அரசியலிலும் நிபுணர்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள் அவர்கள்.

** தமிழ்நாட்டில் எழுத்தாளனாக இருப்பது கண்ணில்லாதவர்களின் தேசத்தில் ஓவியனாகவும், காது கேளாதவர்களின் தேசத்தில் பாடகனாகவும், பிச்சைக்காரர்களின் தேசத்தில் பொற்கொல்லனாகவும் இருப்பதைப் போன்றது. இப்போது கூட தமிழ்நாட்டில் ஒரு மசாலாப் பட இயக்குநருக்கு ஒரு பல்கலைக் கழகம் கௌரவ டாக்கடர் பட்டம் கொடுத்திருக்கிறது. சில்வஸ்டர் ஸ்டலோன் வெள்ளித்திரையில் நன்றாகச் சண்டை போடுகிறார் என்பதற்காக அவரை யாரும் அமெரிக்காவில் புரட்சித் தலைவர் என்று சொல்வதில்லை. அங்கே புரட்சித் தலைவனாகக் கொண்டாடப்படுபவன் சே குவேரா. ஆனால் இங்கே தமிழர்களின் சே குவேரா, ஒரு சினிமா ஹீரோ. ஏனென்றால் அவர் வெள்ளித் திரையில்நன்றாகச் சண்டை போடுகிறார். அங்கே நோம்சோம்ஸ்கிதான் சமூக விஞ்ஞானி என்றால், இங்கே தமிழர்களின் சமூக விஞ்ஞானி மணிரத்னம். ஏனென்றால், மணிரத்னம் இந்தியாவின் பிரச்சினைகளுக்கு வெள்ளித்திரையில் நல்ல தீர்வுகளை வழங்குகிறார். அதேபோல் அங்கே தத்துவவாதி மிஷெல் ஃபூக்கோ; இங்கே கமல்ஹாசன். ஏனென்றால், சினிமாவிலும் நேர்வாழ்விலும் நிறையத் தீத்துவங்களை உதிர்க்கிறார் கமல்ஹாசன்.

** "ஒருவனுக்கு 20 வயதில் காதல் வரவில்லை என்றால் அவனுடைய உடலில் ஏதோ கோளாறு என்று அர்த்தம். ஒருவனுக்கு 40 வயதில் காதல் என்றால் அவன் மனத்தில் ஏதோ கோளாறு என்று அர்த்தம்" என்று ஒரு புகழ்பெற்ற பேச்சாளர் பேசுகிறார். அதைக் கேட்டு ஆயிரம் பேர் கரகோஷம் செய்கிறார்கள். இது என்ன மாதிரியான நாடு? 40 வயது ஆனால் ஆணகுறியை அறுத்து எறிந்துவிட வேண்டுமா?

** இலக்கியக் கூட்டம் ஒன்றில் ஓர் எழுத்தாளர் இரவு உணவுக்குப் பின் தலைவலிக்காக ஸாரிடான் மாத்திரையைப் போட்டிருக்கிறார். உடனே அவருக்கு ஆகாத ஒருத்தர் 'அந்த எழுத்தாளருக்குக் கொடிய மனநோய். தினமும் அதற்கான மாத்திரையை உட்கொள்ளாவிட்டால் அவருக்கு உறக்கம் வராது' என்று எழுதி விட்டார். சிறுபத்திரிகையில்தான் என்ன வேண்டுமானாலும் எழுதலாமே?

** "புல்லு கொடுத்தா பாலு கொடுக்கும்; உன்னால முடியாது தம்பி..." என்ற பாட்டில், தம்பி என்ற வார்த்தை அர்த்த ரீதியாக இடிக்கிறதே; தங்கச்சி என்றல்லவா வரவேண்டும்? என்று ஒருமுறை ஐயம் எழுப்பினான் அவன்.

# யாழ்ப்பாணத்தில் 40 எயிட்ஸ் நோயாளிகள்

## நாடாளுமன்றில் கிளம்பியது சர்ச்சை

(கொழும்பு)

வெளிநாடுகளில் எச்.ஐ.வி. எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளான நாற்பது இலங்கையர்களை சில நாடுகள் நாடு கடத்தியுள்ளன. இந்த 40 பேரும் இப்போது யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றனர் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஹரிஸன், நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்ற கேள்வி நேரத்தின் போதே ஹரிஸன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதனையடுத்து, ஹரிஸனின் கேள்வியொன்றுக்கு பதிலளித்த பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க, "எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளான 772 பேர் மட்டுமே இலங்கையில் உள்ளனர்" என்று கூறினார்.

உலகின் 33 நாடுகள், இந்த நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தியுள்ளன. ஆயினும், இலங்கையில் இவ்வகை நோயாளர்கள் அதிகரித்துள்ளனர். இலங்கையில், 196 நோயாளர்கள் கடந்த வருடம் இனங்காணப்பட்டனர். இந்த வருடம் ஒக்ரோபர் வரையில் 169 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நோயை குணப்படுத்த முடியாது. எனினும், எச்.ஐ.வி தொற்றுடையவர்களுக்கு கூட்டு வைரஸ் எதிர்ப்பு மருந்து கொடுககப்படுவதாக திஸாநாயக்க கூறினார். பிரதி அமைச்சரின் விவரத்தை மறுத்த ஹரிஸன், எச்.ஐ.வி தொற்றுள்ள 40 பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக கூறினார்.

"அவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றனர். இப்போது, இலங்கையில் இந்தியா, பங்களாதேஷ் பிரஜைகள் வேலை செய்கின்றனர். தொற்றுள்ளவர்களை இனங்காண அரசாங்கத்தால் இரத்த பரிசோதனை செய்ய முடியுமா?" என அவர் வினவினார். சம்மதமில்லாமல் இந்த மருத்துவ சோதனையை சகலர் மீதும் மேற்கொள்வதில் சட்ட பிரச்சினை உள்ளதென பிரதி அமைச்சர் கூறினார்.

# தேர்தலுக்குப்பின்னரான வியூகம்

## ஆளும்கட்சிக்குள் வெளிக்கிளம்புகை

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை அடுத்து, பொதுத் தேர்தலை நடத்துவதா அல்லது சர்ஜன வாக்கெடுப்பு நடத்துவதா என்பது தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் புதிய அபிப்பிராயங்கள் தோன்றியுள்ளன. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர். ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டுமென அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்துள்ளார்.

மக்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு அமையவே தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மீண்டும் நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டவே நான் விரும்புகின்றேன். அதன் மூலம் மக்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென அமைச்சர் ஜயரட்ன ஹேரத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு அமைவாக இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட முடியும் என குறிப்பிட்டுள்ளார். இந்த யோசனைத் திட்டத்திற்கு மேலும் சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளித்துள்ளனர்.

இதேவேளை அமைச்சர்களான பிரியங்கர ஜயரட்ன, சீ.பி.ரட்நாயக்க, காமினி லொக்குகே போன்றவர்கள் சர்வஜன வாக்கெடுப்பு அல்லது பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டால் அதனை எதிர்நோக்கத் தயார் என தெரிவித்துள்ளனர்.

# அரசுடன் ஒப்பந்தம் செய்தாரா சம்பந்தன்?

## சவால் விடுத்தார் சஜின்டிவாஸ்

அரசாங்கத்துடன் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தம் பற்றிய ஆவணத்தை முடிந்தால் சமர்ப்பிக்குமாறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குச் சவால் விடுத்துள்ளார் வெளிவிவகார அமைச்சின் மேற்பார்வை எம்.பி.யான சஜின் டி வாஸ் குணவர்தன. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அவர், தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் கூட்டு ஒப்பந்தமொன்றை அரசாங்கம் செய்துள்ளதான குற்றச்சாட்டை நிராகரித்தார். தனது கட்சியுடன் அரசாங்கம் ஒப்பந்தமொன்றை செய்துள்ளது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சில காலத்துக்கு முன்னர் கூறியிருந்தார்.

இந்த ஒப்பந்தத்தின் பிரதியை தான் சமர்ப்பிப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அந்த ஆவணத்தை சமர்ப்பிப்பதாக கூறினாலும் இன்னும் அதை சமர்ப்பிக்கவில்லை. நான் இப்போது அந்த ஆவணத்தை எங்கே என்று கேட்கிறேன். முடிந்தால், அந்த ஆவணத்தை சமர்ப்பிக்கும்படி சவால் விடுக்கிறேன் என அவர் கூறினார்.

# மாலகசில்வா மீது தாக்குதல்

இனம்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் அமைச்சர் மேவின் சில்வாவின் மகன் மாலக சில்வா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதி காலை 03 மணியளவில் கொழும்பு - டுப்ளிகேன் வீதியில் வைத்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதன்போது சிறு காயங்களுக்கு இலக்கான மாலக சில்வா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குல் நடத்தியவர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்பதோடு, சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# இந்திய மீனவர்களின் மரணதண்டனை காப்பாற்றும் முயற்சியில் சுவாமி

போதைப் பொருள் கடத்திய தாக தொடரப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐந்து தமிழக மீனவர்களையும் இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பா.ஜ.க மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து "தினமணி" நிருபரிடம் சுப்பிரமணியன் சுவாமி கூறியதாவது,

கொழும்பில் நவம்பர் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள அதுலத்முதலி நினைவுச் சொற்பொழிவு நிகழ்வில் "சார்க் சீர்திருத்தமும் உலகமயமாக்கலும்" என்ற தலைப்பில் பேசவுள்ளேன்.

அப்போது இலங்கை ஜனாதிபதியை சந்தித்து தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படும் விவகாரம் குறித்தும் விரிவாகப் பேசவுள்ளேன்.

போதைப் பொருள் கடத்திய தாக ஐந்து தமிழக மீனவர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. அவர்களை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அந் நாட்டு ஜனாதிபதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை கடிதம் எழுதியுள்ளேன்.

தண்டனை விதிக்கப்பட்ட இரு நாட்டு கைதிகளையும் பரஸ்பரம பரிமாறிக் கொள்ளும் வகையில், 2010 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ டில்லி வந்தபோது இந்தியாவும் இலங்கையும் உடன்படிக்கை மேற்கொண்டன.

அதன் அடிப்படையில் இந்தியாவில் தண்டனை விதிக்கப்பட்ட ஓர் இலங்கை நாட்டவரை நமது நாட்டு அரசு இலங்கையிடம் ஒப்படைத்தது. அவர் மீதான மேல் முறையீடு வழக்கு அந்த நாட்டு நீதிமன்றத்தில் நடத்தப்பட்டது.

இந்த நிலையில், இதே நடைமுறையை தற்போது தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் விவகாரத்திலும் கடைப்பிடிக்க வேண்டும்.

அவர்களை டில்லியில் உள்ள திகார் சிறையில் அடைத்து அவர்களுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கை இந்திய உச்ச நீதிமன்றத்தில் நடத்த ஒத்துழைக்க வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளேன என்றார் சுப்பிரமணியன் சுவாமி.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# கிழக்கு மாகாண சபையில் உள்ளீர்க்க வடக்கு மாகாண சபை அனுமதிக்குமா?

வடமாகாணத்தின் கீழ் பல்வேறு பணிநிலைகளில் பணியாற்றும் நாம் 15 வருடங்கள் முழுவடைந்த நிலையிலும் பதவி உயர்வு இன்றி தரம் உயர்தப்படாது உள்ளோம்.

கடந்த 17.05.1999 இல் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் 20 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இதில் வடக்கு – கிழக்கில் 272 பேர் அபிவிருத்தி உதவியாளர், நிகழ்ச்சி திட்ட உதவியாளர் உள்ளிட்ட 5 பதவியணிகளில் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களில் கிழக்கு மாகாண உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்ற நான்கு ஆண்டுகளில் வகுப்பு II இற்கு தரம் உயர்த்தப்பட்டு நிலுவைகள் வழங்கப்பட்டு பின்னர் வகுப்பு I இற்கும் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக நாம் அறிகிறோம்.

அபிவிருத்தி உதவியாளர்களாக (Developmet Assistant) நாம் நியமனம் பெற்று 15 வருடங்கள் கடந்துள்ளன.

ஆனால் வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன், பேரவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோர் இந்த மாகாண சபைக்கு வந்து என்ன பிரியோசனம்.

வடமாகாணத்தில் கடமை புரியும் அபிவிருத்தி உதவியாளர்களாகிய நாம் கையெழுத்து இட்டு நேரில் சென்று சி.வி.கேயிடம் கையளித்து பல மாதங்கள் ஆகிவிட்டன, சபையும் பதவி ஏற்று ஒரு வருடம் முழுந்து விட்டது.

வடமாகாணத்தில் 1999 இல் நியமனம் பெற்ற எமது விடயத்தில் இந்த மாகாண அரசு என்ன செய்கிறது.

தேவையற்ற மற்றும் நடைமுறைப்டுத்த முழயாத விடயங்களை தீர்மானிப்பதும் அதனை நடைமுறைப்படுத்தாது விடுவதுமா? உங்கள் வேலை. நாம் 15 வருடம் தொடர்ந்தும் நியமனம் பெற்று வகுப்பு III இலேயே உள்ளோம்.

கிழக்கு மாகாண சபையில் நியமனம் பெற்ற பட்டதாரி அரச சேவையாளர்கள் வகுப்பு II இற்கு 2004 இலும், வகுப்பு I இற்கு 2014 இலும் தரம் உயர்த்தப்பட்டு பதவி உயர்வு பெற்று சூபீட்சமாக வாழுகின்றனர். மேல்பதவிகளுக்கும் சென்றுவிட்டனர். வடக்கு மாகாண சபையின் அதே ஆண்ழல், அதேபதவியில் நியமனம் பெற்ற அலுவலர்கள் தொடர்ந்து கண்ணீரும் – கம்பலை யுமாக வாழுகின்றனர்.

இவ்வாறான பதவி உயர்வுகளை வகுப்புக்களை தரம் உயர்த்த உங்களால் முழயாது விட்டால் வடமாகாணத்தில் பணியாற்றும் 1999 அரச சேவையாளர்களை கிழக்கு மாகாண சபையின் கீழ் கொண்டுவர நடவழக்கை எடுங்கள்.

இல்லாவிழல் ஆளுநரால் உங்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள், அரச செலவில் உங்களுக்கு என பிரத்தியேகமான வடமாகாண சபை கட்டடம், அதற்கான ஆளணி, சம்பளங்கள் யாவும் வீண் என்றே எம்மால் சொல்லப்படும். முதலமைச்சர் தலைமையிலான இந்த கூட்டங்களும், தீர்மானங்களும் வீண். எனவே பதவி உயர்வில் அக்கறையெடுங்கள் . அல்லது ஒய்வு பெற்று செல்லுவதற்கு விசேட தீர்மானம் நிறைவேற்றி 1999 பட்டதாரிகளுக்கு அறிவியுங்கள் என வ்டமாகாண முதலமைச்சரை கேட்டுக்கொள் கிறேன்.

– 1999 நியமனம் பெற்ற அரச சேவையாளர் வடமாகாணம்

– சோ.க.நாதன் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் வடமாகாண சபை

# டெங்கை – முற்றுமுழுதாக ஒழிக்க ஒன்றிணைவோம்

நான் ஒரு ஊடகப்பிரியன். யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் பத்திரிகைகளை அனேகமாக வாசிக்கத்தவறுவதில்லை. தற்போது தினமும் பத்திரிகையை எடுத்து பழத்தால் எங்காவது ஒரு பகுதியில் டெங்கு நோய் வைத்தியசாலையில் அனுமதி என்ற செய்தியை தினமும் காணமுழகிறது. இந்த டெங்கு நோயை கட்டுப்படுத்த சுகாதாரப்பிரிவினரும் அய ராது பாடுபட்டு வருவதை மறுக்கமுழயாது.

இந்த நோயை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு பொது மக்களாகிய நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்ழய கடப்பாடு உள்ளது. சிலர் தான் றோன்றித் தனமாக நடந்து கொள்வதால் நீதிமன்றில் தண்டப்பணம் செலுத்தியும் உள்ளனர்.

எனது அன்புக்கினிய தாயக உறவுகளே! உங்கள் வீடுகள் மற்றும் வெற்றுக்காணிகளில் உள்ள செழ கொழகளை அகற்றுங்கள்.

மற்றும் வீடுகளில் உள்ள சிரட்டைகள், கோம்பைகள், பழயரயர்கள் என்பவற்றை மழையில் நனைய வீடாதீர்கள்.

அல்லாவிழல் அவற்றை சுட்டெரித்து விடுங்கள். சுகாதாரப்பிரிவினரின் அறிவுறுத்தலின் படி நடந்து கொள்ளுங்கள். சகலரும் சுகதேசிகளாக வாழட்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோயை நாம் நிறைகுடம் வைத்து வரவேற்க வேண்டு மென யாரும் நினைப்பதில்லை. எனவே தற்போது மழைகாலம் என்பதால் அவதானமாக விழிப்புடன் இருந்து இந்த டெங்கு நோயை விரட்டியழத்து சகரும் ஒன்றிணைந்து நோயற்றவர்களாக வாழ்வோமாக!

– அருமைச்சந்திரன் – அ.அன்பு, வடவரணி

குறிப்பு:- தினமுரசுக்கு வந்த கடிதம் எனும் தலைப்பில் பலவேறு கடிதங்கள் வருகின்றன. தங்கள் கடிதங்களும் பிரசுரமாகாததைக் கேட்டும் வாசகர்கள் எழுதுகிறார்கள். கண்டிப்பாக தரமானவை அனைத்தையும் பிரசுரத்துக்கு எடுத்துக்கொள்வோம் என்பதனை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். - ஆசிரியர் -

● 22 ஆம் 23 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள இரு வாக்கியங்களினதும் கருத்திற்கேற்பச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

22. முரளியின் வீடு சங்கரின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது.
சங்கரின் வீடு மோகனின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது. ஆகவே
(1) முரளியின் வீடு மோகனின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது.
(2) மோகனின் வீடு முரளியின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது.
(3) மோகனின் வீடு சங்கரின் வீட்டிலும் பார்க்க முரளியின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது.

23. காற்று வீசினால் வெப்பம் குறையும். காற்று வீசவில்லை. எனவே
(1) வெப்பம் அதிகரிக்கின்றது (2) வெப்பம் குறைகின்றது.
(3) வெப்பம் மாறாதிருக்கின்றது.

● 24 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் பின்வரும் பந்தியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதனுடன் தொடர்புடையவை. வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்க.


நிமலன் இசையில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ளான். ஆகவே பெற்றோர்கள் அவனை அதற்காக 24. .......................... [(1) பயிற்சியளிப்பதற்கு (2) உற்சாகப்படுத்துவதற்கு (3) வழிப்படுத்துவதற்கு] இசை வகுப்பிற்கு அனுப்பினர். நிமலன் மிகவும் விருப்பத்துடன் வகுப்பிற்குத் தவறாமல் சென்று வயலின் 25. ......................... [(1) பாட (2) வாசிக்க (3) அடிக்க ] நன்றாகக் கற்றான். அவனுடைய பெற்றோர் தமது மகனைப் பற்றி மிகவும் 26. ................ [(1) மகிழ்ச்சி (2) கவலை (3) இரக்கம் ] அடைந்தனர்.

● பின்வரும் இரு கவிதைகளையும் வாசித்து 27ஆம் 28 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

குளத்தில் தாமரை மலர்கள் மலர்ந்தனவே
பூவின் நறுமணம் திசையெங்கும் பரவியதே
வீசிய காற்று குளிரைத் தரவே
எம் உள்ளம் அசைந்ததே
உள்ளம் எங்கும் உவகை தோன்றவே
கையில் பூவை ஏந்திச் சென்று
மகனே உன் பெற்றோரை நீ வணங்குவாயானால்
ஒருபோதும் உனக்கு வாராதே தீங்கு

27. 'வீசிய காற்று குளிரைத் தரவே' என்பதன் கருத்து யாது?
(1) வீசிய குளிர்ச்சியான காற்று
(2) குளத்தில் நிறைந்த நீர்
(3) பூக்களின் மணமுள்ள காற்று

28. 'உனக்கு வாராதே தீங்கு' என்பதன் கருத்து யாது?
(1) பெற்றோர்கள் உனக்குத் தீங்கு செய்யமாட்டார்கள்
(2) உனக்கு ஒருபோதும் தீங்கு ஏற்படமாட்டாது
(3) உனது வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.

29. பின்வரும் எந்தப் பொருட் சோடி மேலிருந்து பார்க்கப்படும்போது  எனத் தோன்றும்?



(1) (2) (3)

பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 15 நிமி




# கல்வி முரசு

1 தொடக்கம் 33 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


● 1ஆம் 2ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க.

1.




(1) (2) (3)

2.



(1) (2). (3)


3. பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

4. பின்வரும் உருக்களில் உள்ள விளக்குகளைப் பார்க்க.


இவ்விளக்குகளை ஒரு குறித்த இயல்பு தொடர்பாக ஒழுங்குபடுத்தி வைத்தால் கிடைக்கத்தக்க விடை யாது?



A B C D

(1) C, A, D, B (2) B, A, D, C (3) D, C, B, A

5. உடைந்த ஒரு வரைகோலின் 4 பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.



1 2 3 4

வரைகோலை ஆக்குவதற்கு இப்பகுதிகளைச் சரியாகப் பொருத்த வேண்டிய விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) 4, 3, 2, 1 (2) 1, 3, 2, 4 (3) 4, 3, 2, 1

6. உடைந்த போத்தல் ஒன்றின் சில துண்டுகள் பின்வரும் உருக்களில் காணப்படுகின்றன.




போத்தலை ஆக்குவதற்குப் பொருத்த வேண்டிய மூன்று துண்டுகள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.
(1) 1, 3, 4 (2) 6, 3, 2 (3) 1, 2, 5


● 7ஆம் 8ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.


7. மீனவனுக்குக் கடல் போன்று விளையாடுபவனுக்கு ..........................................
(1) மைதானம் (2) பந்து (3) துடுப்பு

8. ஆசிரியருக்கு மாணவன் போன்று மருத்துவருக்கு ..........................................
(1) பொதுமக்கள் (2) நோயாளி (3) தாதி

9. ஒவ்வொரு பந்தியிலும் ஒரு வகை மாத்திரம் இருக்கத்தக்கதாக 5 பாத்திகளில் மரக்கறிப் பயிர்களும் பூச்செடிகளும் வளர்க்கப்படுகின்றன. பூச்செடிகள் வளர்க்கப்படும் பாத்திகளின் எண்ணிக்கை இரண்டு ஆகும். மரக்கறிப் பயிர்களும் பூச்செடிகளும் இருக்கத்தக்க விதத்தைத் தெரிவு செய்க.
(1) றோசா, செவ்வந்தி, முள்ளங்கி, அவரை, கோவா
(2) றோசா, செவ்வந்தி, அந்தூரியம், முள்ளங்கி, அவரை
(3) றோசா, முள்ளங்கி, அவரை, கோவா, கரட்


● 10 ஆம் 11ஆம் வினாக்களுக்குப் பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.





எதற்குச் சமம்?

(1) 800ml (2) 1000ml (3) 1600ml

பின்வருவனவற்றில் மிகவும் சரியான தொடர்பு யாது?




ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 2 கொடிகள் வீதம் தொங்கவிட்டு அவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 8 மின்கம்பங்கள் இருந்தால், அவற்றுக்கிடையே



தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?
(1) 14 கொடிகள் (2) 16 கொடிகள் (3) 18 கொடிகள்

13. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 8 (2) 12 (3) 32

14. 2007 ஆம் ஆண்டில் 365 நாட்களும் 2008 ஆம் ஆண்டில் 366 நாட்களும் உள்ளன. 2007 ஆம் ஆண்டில் ஜனவரி 1 ஆம் தேதி திங்கட்கிழமையாகும். 2008 ஆம் ஆண்டில் ஜனவரி 1ஆம் தேதி செவ்வாய்க்கிழமையாகும். இதற்கேற்ப 2009 ஜனவரி 1ஆம் தேதி
(1) திங்கட்கிழமை (2) புதன்கிழமை (3) வியாழக்கிழமை

15. ஐந்து ஞாயிற்றுக்கிழமைகள் உள்ள ஓர் ஏப்ரல் மாதத்தில் அந்த ஞாயிற்றுக்கிழமைகளின் தேதிகளின் மொத்தத்திற்கு இருக்கத்தக்க உயர்ந்தபட்சப் பெறுமானம்.
(1) 75 (2) 80 (3) 85

16. கடலில் நிதமும் இருப்பவை
(1) அலைகளும் மீன்களும் (2) மீன்களும் நீரும் (3) நீரும் உப்புச் சுவையும்

17. ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை
(1) எழுத்துக்களும் கருத்தும்
(2) கருத்தும் அச்சுப் பிழைகளும்
(3) இகரக் குறியும் உகரக் குறியும்

18. சந்திரன் தோற்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் என மோகன் கூறுகின்றான். இது நடைபெற இயலாது. இதற்குக் காரணம்.
(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை
(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லாமை
(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை

19. கண்ணனின் ஒரே பிள்ளையாகிய ரவி பாடசாலைக்குத் தாமதமாக வந்து, தம்பியுடன் கடைக்குச் சென்று திரும்பி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினான். இது உண்மையாக இருக்கலாம். இதற்குக் காரணம்
(1) ரவி உலாவித் திரிய விரும்புகின்றமை
(2) ரவிக்குச் சில சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றமை
(3) ரவியின் சிறிய தகப்பனாரின் ஒரு மகனும் ரவியின் வீட்டில் இருக்கின்றமை

● 20 ஆம் 21 ஆம் வினாக்களிலே தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்க.

20. பாடசாலைச் சேவைப் பேருந்து நேரந் தவறாமல் பாடசாலைக்கு வருகின்றது
(1) இரு பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.
(2) இது ஒருபோதும் நடைபெறுவதில்லை
(3) இது எப்போதும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

21. முயன்றால் வெற்றியீட்டலாம்.
(1) இது எப்போதும் உண்மையாகும்.
(2) ஒரு பெரும்பாலும் உண்மையாகும்.
(3) இது ஒருபோதும் உண்மையானதன்று.

## மன்னார் மாவட்டத்தில் மழையின்மை
# பெரும்போக நெற்செய்கையை விவசாயிகள் கைவிட நேரிடலாம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் இவ்வருடத்திற்கான பெரும்போக மழையின்மையால் 90 வீதமான விவசாயிகள் சலிப்படைந்துள்ளனர்.

பெரும்போகத்திற்கான மழை உரிய காலத்தில் பெய்யாததால் நெற் செய்கை விவசாயிகள் ஏமாற்றமடைந்து வருகின்றனர்.

இவ்வருடம் மன்னார் மாவட்டத்தில் மழைபெய்யாது விட்டால் பஞ்சம் - பசி - பட்டினி தலைவிரித்தாடும் நிலை உருவாகும் என மன்னார் அடம்பன் விவசாயிகள் சம்மேளன தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் பெரும்போக மழைவீழ்ச்சி குறைவினால் நெற்பயிர்கள் முற்றாக வரட்சியினால் அழிவடைந்தன.

இதற்கான வரட்சி நிவாரண காப்புறுதி நிதியும் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை.

இன்றும் ஓரிரு தினங்களில மழை பெய்யாது விட்டால் 2014 பெரும்போக நெற்செய்கையைக் கைவிட விவசாயிகள் ஆலோசித்து வருகின்றனர்.

# மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இளைஞர் கழகத்தால் நிவாரணம் சேகரிப்பு

(வவுனியா)

பதுளையில் இடம்பெற்ற இயற்கையின் கோர தாண்டவத்தில் அல்லலுறும் எமது உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்ட அனைவரும் முன்வர வேண்டும் என வவுனியா கோவில்குளம் இளைஞர் கழகம் அறிவித்துள்ளது. அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது.

மண்சரிவால் ஒரேநாளில் நடுத்தெருவுக்கு வந்துள்ள எமது உறவுகளான தமிழ் மக்களுக்கு உதவ வேண்டியது ஒவ்வொரு தமிழர்களினதும் தலையாய கடமையாகும்.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்களது உதவிகளை அந்த மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதற்கான உதவிகளை நாம் செய்து தருவோம்.

"அதிரடி" இணையத்தளம், மற்றும் பிரித்தானியாவின் "வெற்றி" வானொலி, "பூர்வீகம்" செய்திகள் ஆகியவற்றின் ஆதரவுடன் "வவுனியா கோவில் குளம் இளைஞர் கழகத்தினரால்" எமது உறவுகளுக்கான நிவாரண பொருட்கள் சேகரிக்கப்படுகின்றன. நல்லுள்ளம் படைத்த எமது உறவுகள் உதவிட கழகத்தைச் சேர்ந்த காண்டீபன் 075772944, நிவேதன் 0766644059 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவ முடியுமென கழகத்தினர் அறிவித்துள்ளனர்..

# கந்தர்மடம் மணல்தறை வீதி புனரமைப்பு குறித்து ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

மணல்தறை லேன், கந்தர்மடம் வீதி புனரமைப்பு தொடர்பில் ஆராயும் முகமாக நேரில் ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச இணைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அம்பலம் ரவீந்திரதாசன் நேரில் சென்று பார்வையிட்டார்.

வீதிப்புனரமைப்பு தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார். இதன்போது நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன் உடனிருந்தார்.

# பிரதேச அபிவிருத்தி நோக்கிய 2015 பட்ஜெட் தயாரிப்பு
## பதில் தவிசாளர் மகேந்திரன் தலைமையில்

(மன்னார்)

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் 2015 பட்ஜெட் கூட்டம் பிரதேச சபை பதில் தவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் தலைமையில் முன்வரைபுகள் ஆராயப்பட்டன.

இதில் மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட மாதகல், ஆனைக்கோட்டை கிராம உப அலுவலர்களின் அபிவிருத்திக்கும், உட்கட்டுமானத்திற்கும் முன்னுரிமை அளிக்குமாறு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஜெ.செல்வராஜா தவிசாளரைக் கோரியுள்ளார்.

மேலும் 2015 பட்ஜெட் முன்மொழிவுகளில் பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்குமாறு சபை உறுப்பினர்கள் ஒருங்கிணைந்த ரீதியில் தவிசாளர் சின்னத்துரை மகேந்திரனை கோரியுள்ளனர்.

இதனைவிட எதிர்காலத்தில் நெல்சிப் - புறநெகும் திட்டத்தில் வேலைத்திட்டங்களை முன்மொழியும் போது மக்கள் [illegible] கேற்பு திட்டத்தில் உள் [illegible] திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு மானிப்பாய் பிரதேச சபை ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் 2015 வரவு - செலவுத் திட்டம் ஆனது பயனுறுதி வாய்ந்த திட்டமாக இருப்பதனால் ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்ற வேறுபாடு இன்றி பிரதேச நலனில் அக்கறை செலுத்தி ஒருங்கிணைந்த ரீதியிலான வரவு - செலவுத் திட்டத்தை முன்மொழிவோம் என எதிர்க்கட்சி தலைவர் பெ.அ.ஜோன்சன் (ஜீவா) மேலும் தெரிவித்தார்.

# பரீட்சை அட்டவணை

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் இம்மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகளின் விபரம் வருமாறு -

| இல | பரீட்சையின் பெயர் | திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2014 | 02 | கொழும்பு யாழ்ப்பாணம் |
| 02 | II ஆம் தர சுங்க பரிசோதகர்களுக்காக நடைபெறும் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (புதிய பாடத்திட்டம் -2014) (II) | 08 | இலங்கைப் பரீட்சைத் திணைக்கணம் |
| 03 | I ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்காக நடைபெறும் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (பழைய பாடத்திட்டம் -2014) (II) | 08, 09 | இலங்கைப் பரீட்சைத் திணைக்கணம் |
| 04 | I ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்காக நடைபெறும் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (பழைய பாடத்திட்டம் -2014) (II) | 08, 09 | இலங்கைப் பரீட்சைத் திணைக்கணம் |
| 05 | ICMASL Examination November -2014 | 15, 16, 22, 23 | கொழும்பு |
| 06 | இலங்கை பரீட்சைத் திணைக்களம் - பரீட்சை தரவுகள் உதவியாளர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த பேட்டிப் பரீட்சை - 2014 (செய்முறைப் பரீட்சை) | 16 | கொழும்பு |
| 07 | CIMA Examination November -2014 | 18, 19, 20 | கொழும்பு /கண்டி காலி/யாழ்ப்பாணம் |
| 08 | II ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்காக நடைபெறும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை (புதிய பாடத்திட்டம் -2014 ) II | 21 | கொழும்பு |
| 09 | இலங்கை சுங்கத் திணைக்களத்தின் II ஆம் தர சுங்கப் பரிசோதகர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போப்டிப் பரீட்சை -2014 | 22 | நாடு முழுவதும் |
| 10 | இந்து அறநெறி பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை (இந்து தஹம் பாடசாலை) -2013 (2014) | 22, 23 | நாடு முழுவதும் |
| 11 | தேசிய நடன / சங்கீத பரீட்சை -2014 (எழுத்துப் பரீட்சை) | 29 | நாடு முழுவதும் |
| 12 | இலங்கை சுங்கத் திணைக்களத்தின் II ஆம் தர உதவி சுங்கப் பரிசோதகர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2014 | 23 | கொழும்பு |
| 13 | அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் நிறைவேற்று அலுவலர் தரத்தின் வகுப்பு I தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - 2014 | 29 | கொழும்பு |
| 14 | உதவி விடுதி மேற்பார்வையாளர் (ஆண்/பெண்) மற்றும் உதவி மாணவ விடுதி காப்பாளர்கள் (ஆண்/பெண்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 | 29 | கொழும்பு |
| 15 | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் (விசேட பதவியணி) III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை - 2014 | 30 | கொழும்பு |

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான பரீட்சையும் உதவிக் கருத்தரங்கும்

வடமாகாண கல்விப் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய டிசம்பர் மாதம் க.பொ.த (சாதாரண) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட பரீட்சையும் உதவிக் கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சை மற்றும் கருத்தரங்கு வடமாகாணத்திலுள்ள சகல வலயங்களிலும் நடாத்த ஏற்பாடாகியுள்ளன.

இதன்படி பரீட்சைகளாக நாளை காலை 8 மணிமுதல் 1 மணி வரை தமிழ் நாளை மறுதினம் மு.ப 8 -12 மணிவரை விஞ்ஞானம், 5 ஆம் திகதி காலை 8 மணிமுதல் 12 மணிவரை கணிதமும், பிற்பகல் 1 மணி முதல் 4 மணி வரை வர்த்தகமும் முயற்சியாண்மைக் கல்வியும் 17 ஆம் திகதி காலை 8 மணிமுதல் 12 மணிவரை வரலாறு, பிற்பகல் 1 மணி முதல் 4 மணிவரை ஆங்கிலம் இடம்பெறவுள்ளது.

மேலும் கருத்தரங்குகள் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் மு.ப 8 மணிமுதல் நடைபெறவுள்ளது. இதில் 20 ஆம் திகதி தமிழ், 21 ஆம் திகதி விஞ்ஞானம், 22 ஆம் திகதி கணிதம், 26 ஆம் திகதி வர்த்தகம் முயற்சியாண்மைக் கல்வியும், 24 ஆம் திகதி வரலாறும், 25 ஆம் திகதி ஆங்கிலம் ஆகிய பாடங்களும் இடம்பெறவுள்ளது.

பரீட்சைகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட கால அட்டவணைக்கமைய பாடசாலை மட்டத்தில் நடைபெறும் பரீட்சை வினாத்தாள்களை தங்கள் பாடசாலைக்குரிய கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் விடைத்தாள்கள் பாட ஆசிரியர்களால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

மேலும் கருத்தரங்குகள் மேற்குறிப்பிட்ட கால அட்டவணைக்கமைய நடைபெறும். கருத்தரங்கு நடைபெறும் தினத்தன்று மாணவர்களை பாடசாலைகள் தமக்குரிய நிலையங்களுக்கு பொறுப்பாசிரியருடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கருத்தரங்கு நடைபெறும் தினத்தன்று மாணவர்களுக்கு பரீட்சை வினாத்தாள்களுக்குரிய புள்ளி வழங்கும் திட்டம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (66)

# இலங்கை தூக்குத் தண்டனை விதித்தது தவறு

## மேல் முறையீடு செய்து நீதி நிலைநாட்டப்படும்

### மத்திய அரசு தெரிவிப்பு

தமிழக மீனவர்கள் 5 பேருக்கு இலங்கை நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது தவறானது. நீதிமன்றத் தீர்ப்பு நகல் கிடைத்ததும் மேன்முறையீடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். தூக்குத்தண்டனை விவகாரத்தில் சட்ட நடவடிக்கை தொடங்கியுள்ளது. சட்ட நடவடிக்கை முடிந்தால் இலங்கை அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என இந்திய வெளியுறவுத்துறை செயதித் தொடர்பாளர் சையது அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த வில்சன், எமர்சன், அகஸ்டஸ், பிரசாத், லாங்லெட் ஆகிய ஐந்து தமிழக மீனவர்களுக்கு இலங்கையில் உயர்நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.


இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கண்டித்து தமிழகத்தில் பலரும் அறிக்கை வெளியிட்டு, மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இந்தநிலையில் இதுதொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன்,

1990ல் 2 இந்தியர்களின் தூக்குத் தண்டனையை இலங்கை அரசு ஆயுள்தண்டனையா குறைத்துள்ளது. 5 மீனவர்களுக்கு தூக்குத் தண்டனை விதித்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படும். தண்டனை குறித்து இலங்கை பாதுகாப்புத் துறை,வெளியுறவுத்துறை அமைச சர்களிடம் முறையிடப்படும் என்றார்.

2011 நவம்பர் 28 இல் இராமேஸ்வரம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த 5 பேரும் மீன்பிடிக்கச் சென்றனர். அப்போது ரோந்து வந்த இலங்கை கடற்படையினர், மீனவர்கள் படகை சுற்றி வளைத்து, ஐந்து பேரையும் சிறை பிடித்தனர். போதைப் பொருள் கடத்தி வந்ததாக வழக்கு பதிவு செய்து அவர்களை யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர் என்றார்.

# விர்ஜீன் நிறுவனத்தின் ரொக்கெட் விமானம் பாலைவனத்தில் விழுந்து நொருங்கியது




கலிபோர்னியா விர்ஜீன் நிறுவனத்தின் சுற்றுலா பயணிகளை விண்வெளிக்கு ஏற்றி செல்லும் சிறிய ரொக்கெட் விமானம் ஒன்று தனது சோதனை ஓட்டத்தின் போது மொஜாவெ பாலைவனத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானி ஒருவர் உயிரிழந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானம் கிளம்பிய சிறிது நேரத்திலேயே அது கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. பின்னர் மொஜாவெ பாலைவனத்தில் விழுந்து நொருங்கியமை கண்டுபிடிக்கப்பட்டது. விர்ஜின் நிறுவனம் சுற்றுலா பயணிகளை விண்வெளிக்கு அழைத்து செல்லும் திட்டத்தில் ஆட்களை சேர்ப்பதில் முன்னணியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காங். தலைவர் பதவியை ராகுல் ஏற்க வேண்டும்

### திக்விஜய்சிங் தெரிவிப்பு



காங்கிரஸ் கட்சியில் அமைப்பு ரீதியிலான தேர்தல்களை நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக 2015 இல் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்கு தேர்தல் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காங்கிரஸ் தலைவர் பதவியை ராகுல் உடனே ஏற்க வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய்சிங் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டி வருமாறு:

ஒரு கட்சியின் தலைவருக்கும், கட்சிக்கு ஏற்படும் வீழ்ச்சிக்கும் எந்த தொடர்பும் இல்லை. எனவே காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ள திடீர் சரிவுக்கு தலைமையை குறை சொல்லக் கூடாது.

அதேசமயத்தில் இந்த இக்கட்டான நேரத்தில் காங்கிரஸ் தலைவர் பதவி பொறுப்பை சோனியாவிடம் இருந்து ராகுல் பெற வேண்டும். இந்த மாற்றம் நிகழ இதுவே சரியான நேரமாகும்.

சோனியாவுக்கு சற்று ஓய்வு கொடுத்து விட்டு ராகுல் தலைவர் ஆவது நல்லது. அதை நாங்கள் அனைவரும் வரவேற்போம்.

காங்கிரஸ் எப்போதுமே இளம் தலைமுறையை வரவேற்கும் கட்சியாகும். ஜவகர்லால் நேரு தன் 38 ஆவது வயதில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ஆனார். மவுலானா ஆசாத் காங்கிரஸ் தலைவராக பதவி ஏற்ற போது அவருக்கு 35 வயது. எனவே ராகுல் காங்கிரஸ் தலைவர் பொறுப்பை ஏற்க இதுவே சரியான நேரமாகும். என்றார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ்.க்கு எதிராக போரிட அனைத்து நாடுகளும் முன்வரவேண்டும்

### அமெரிக்க கூட்டுப்படைகளின் தளபதி

ஈராக் நாட்டில் ஐ.எஸ்ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் நடைபெற்று வரும் வான்வழி தாக்குதலில், அனைத்து நாடுகளின் உதவியும் ஆலோசனைகளும் தேவைப்படுகிறது. இதற்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமெரிக்க கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் மார்ட்டீன் டிம்ப்சே நேற்று முன்தினமிரவு வாஷிங்டனில் கூறினார்.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக நடைபெற்று வரும் வான் வழி தாக்குதல் குறித்துநேற்று முன்தினமிரவு வாஷிங்டனில் அமெரிக்க கூட்டுப் படைகளின் தளபதி மார்ட்டீன் டிம்ப்சே நிருபர்களிடம் கூறியதாவது,

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

ஈராக்கில் அன்பர் பிராந்தியத்தில் மட்டும் ஏராளமான தீவிரவாத பயிற்சி முகாம்களை அமைத்து ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பயிற்சி அளித்து வருகின்றனர்.

இப்பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைக்ள் தொடர்ந்து வான்வழி தாக்குதல் நடாத்தி வருகின்றன. எனினும், அவர்கள் வேறு பகுதிகளுக்கு ஊடுருவி தாக்குதல் நடாத்தி வருகின்றனர். அவர்களை எதிர்த்து தரை வழியாக தாக்குதல் நடாத்த ஈராக் மற்றும் குர்தீஷ் பிராந்திய இராணுவம முன்வந்துள்ளது.

அவர்களுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகள் இராணுவ பயிற்சிகளை அளித்து வருகின்றன.எனினும், அவர்களின் இராணுவ பயிற்சிக்கு மேலும் பல நாடுகள் உதவ முன்வர வேணடும்.அத்துடன், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் மேற்கொள்ள வேண்டிய யுக்திகள் குறித்து அனைத்து நாடுகளின் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பிராந்தியங்களில் சன்னி பிரிவு முஸ்லிம்களின் ஆதரவுடன் கடந்த மார்ச் மாதம் முதல் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.


அன்பர் பிராந்தியத்தில் உள்ள கிராமத்தை கடந்த வாரம் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி, அங்கிருந்த அல்பு நிமர் பிரிவை சேர்ந்த சுமார் 220 முஸ்லிம்களை கொன்று குவித்துள்ளனர்.ஈராக்கில் பாக்தாத் மற்றும் அர்பில் நகரில் ஈராக் இராணுவதத்தின் ஒத்துழைப்புடன் அமெரிக்க கூட்டுப் படைகள் தரைவழி தாக்குதல் நடாத்தி வருகின்றன.

அன்பர் பிராந்தியத்தில் வான் வழி தாக்குதல் மட்டுமே நடைபெற்று வருகிறது. இத்தாக்குதலுக்கு ஒத்துழைப்பு அளிக்க அனைத்து நாடுகளும் முன்வர வேண்டும் என்று 'அமெரிக்க கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் மார்ட்டீன் கூறினார்.

உலகச் செய்திகள்

# கருவில் இருக்கும் சிசுவிற்கு இதய அறுவை சிகிச்சை

### இந்தியாவில் மருத்துவர்கள் சாதனை



இந்தியாவில் முதல்முறையாக கருவில் இருக்கும் சிசுவிற்கு இதய அறுவை சிகிச்சை செய்து ஐதராபாத் மருத்துவர்கள் சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

ஐதராபாத்தில் உள்ள கேர் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட இந்த அறுவை சிகிச்சையில், ஸ்ரீஷ எனும் (வயது-25) பெண்ணின் கருவில் இருந்த சிசுவின் இதயத்தில் காணப்பட்ட இரத்தக் குழாய் அடைப்பு வெற்றிகரமாக குறைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அறுவை சிகிச்சை செய்த மருத்துவக்குழுவின் மருத்துவர் நாகேஸ்வர ராவ் கூறுகையில்,

26 வாரம் ஆன நிலையில் பரிசோதனையின்போது, சிசுவின் இதயத்தின் இடது பக்க ரத்தக்குழாயில் பாதிப்பு ஏற்பட்டிருந்தமை பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த இரத்தக் குழாய் சுருங்க ஆரம்பித்திருந்ததால் குழந்தை பிறக்கும்போது இதயத்தின் இடது பக்கம் மிகவும் சிறியதாக இருந்திருக்கும். அதனால், சிசுவிற்கு ஃபோட்டல் ஆர்டல் வால்வோட்டமி (foetal aortal volvotomy) என்னும் அறுவை சிகிச்சையை மேற்கொள்ள முடிவு செய்தோம்..

பின்னர் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள முடிவு செய்து, சிசுவின் 27ஆவது வாரத்தில் தாய்க்கும், சிசுவிற்கும் மயக்க மருந்து கொடுக்கப்பட்டு, வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஊசியின் உதவியோடு பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட பலூன் மற்றும் கம்பியைப் பயன்படுத்தி சிசுவின் இதயத்தில் இருந்த இரத்த குழாய் அடைப்பு சரி செய்யப்பட்டுள்ளது.

இந்த அறுவை சிகிச்சைக்கு பிறகு தாயின் கருப்பைக்குள் இருந்த சிசுவின் இதயத்தில் இருந்த 99% அடைப்பு 60% மாக குறைக்கப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சைக்குப்பின் சிசுவின் உடல் நிலை நலமாக உள்ளது. சிசுவின் எடை 830 கிராமிலிருந்து 1200 கிராமாக அதிகரித்துள்ளதோடு, தாயும் உடல்நலனோடு உள்ளனர் என்றார்.

# உரிமையாளரை கைது செய்ய பொலிஸ்க்கு உதவிய நாய்

அமெரிக்காவின் அலபாமா பகுதியில் போதை மருந்து வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபரை கைது செய்ய அவர் வளர்த்த நாயே உதவி செய்த சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

மத்திய அலபாமா பகுதியில் வசித்து வந்த எட்வின் ஹெண்டர்சன் எனும் நபரை போதை மருந்து வைத்திருந்த குற்றத்திற்காக பொலிஸார் கைது செய்ய வந்தனர்.

அப்போது பொலிஸாரிடம் இருந்து தப்பி ஓடிய எட்வினை தொடர்ந்து செல்லும்படி பொலிஸார் எட்வின் வளர்த்து வந்த நாய்க்கு கட்டளையிட்டனர். உடனடியாக எட்வினை தொடர்ந்து சென்ற வளர்ப்பு நாய் பொலிஸார் அவரை கைது செய்ய உதவி புரிந்தது.

இச்சம்பவம் குறித்து தெரிவித்த பொலிஸார் செய்தி தொடர்பாளர், 'ஹெண்டர்சன் மீது பொலிஸாருக்கு கீழ்படியாதது, போதை மருந்து வைத்திருந்தது போன்ற குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன' எனத் தெரிவித்துள்ளார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம்

# செயற்றிட்டத்தில் பல்கலை மாணவர்கள்



யாழ் பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர் ஒன்றியங்களின் ஏற்பாட்டில் பதுளை மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மலையக உறவுகளுக்கு உதவிக்கரம் கொடுக்கும் செயற்திட்டத்தில் நேற்று யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் பல்கலைக்கழக மாணவர்கள் நிதி மற்றும் உணவுப் பொருட்கள் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்த வகையில் நேற்று வடமராட்சிப் பிரதேசத்தின் நெல்லியடி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுமக்களிடம் நேரடியாகச் சென்று சேகரிப்புப் பணியை மேற்கொண்டனர்

தம்மாலான நிதி மற்றும் பொருள் உதவிகளை வடமராட்சிப் பிரதேச வர்த்தகர்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள், வழங்கியிருந்தனர் யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர்களும் முழு நேரமும் நின்று பாதிக்கப்பட்ட மக்களுக்கான இச்சேவையில் ஒத்துழைத்தனர்.

(90)

### போதைப்பொருள்...

டது.

இந்த நிலையிலேயே இந்தி[illegible] சிறைகளிலும் போதைப் பொருள் கடத்திய வழக்கில் இலங்கையர்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா முழுவதிலும் உள்ள சிறைகளில் சுமார் 400 வெளிநாட்டுக் கைதிகள் இருப்பதாகவும் அவர்களில் 110பேர் இலங்கையர்கள் எனவும் இந்து வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சிறுபான்மையினரின்...

உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துரலியே ரத்ன தேரர் முன்வைத்துள்ள 19ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டமானது சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறிய அதிகாரங்களைப் பறிக்கும் யோசனை.

உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் வேலுப்பிள்ளை பிரபாகரனே இதன் மூலம் மகிழ்ச்சியடைவார் எனவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

### பாப்பரசரின்..

லான கால இடைவெளியை அதிகரிக்குமாறு தாம் கோரியிருப்பதாக கத்தோலிக்க சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் இதற்கான தீர்மானத்தை அரசாங்கமும் தேர்தல்கள் ஆணையாளருமே மேற்கொள்ள முடியும்.

எனவே இந்த விடயத்தில் கத்தோலிக்க திருச்சபை எவ்வித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் அரசாங்கத்தரப்பில் இருந்து ஜனாதிபதியோ அல்லது வேறு எவருமோ பாப்பரசரின் விஜயத்தை பிற்போடுமாறு தமக்கு அழுத்தம் தரவில்லை என்றும் கத்தோலிக்க திருச்சபை குறிப்பிட்டுள்ளது.

### மக்கள்....

இடம்பெற்ற வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

[illegible]புத்தத்துக்குப் பின்பு அதாவது, கடந்த 2009 - 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்வரை கிட்டத்தட்ட 286,890 மில்லியன் ரூபாய் வட மாகாணத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தப் பாரிய ஒதுக்கீட்டிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு 89,021 மில்லியன் ரூபாவும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 60,259 மில்லியன் ரூபாவும் வவுனியா மாவட்டத்துக்கு 36,085 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 38,700 மில்லியன் ரூபாயும் மன்னார் மாவட்டத்துக்கு 62,825 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 286,890 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகவே, வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படவில்லையென்ற வாதத்தை நான் மறுக்கின்றேன். வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது நாட்டின் அபிவிருத் திக்காகவும் அனைத்து மக்களின் நலன் சார்ந்த விடயங்களுக்காகவுமேயாகும்.

ஆனால், இந்த 286,890 மில்லியன் ரூபாவானது விசேட கருத்திட்டங்களின் அடிப்படையில் எங்கள் மாவட்டங்களுக்கு கிடைத்ததென்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன் அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய ஒவ்வொரு துறைசார்ந்த அமைச்சர்களும் வடக்கிற்கு பயணம் செய்து நேரில் அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்து, அந்த மக்களுடன் கலந்து பேசி அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்து வருகின்றனர். இதனால் மிகக் குறுகிய காலத்தில் கல்வி, மருத்துவம், விவசாயம், போக்குவரத்து, மின்சாரம், வீதிப் புனரமைப்பு, கடற்றொழில், விளையாட்டு போன்ற அனைத்துத் துறைகளும் முன்னேற்றமடைந்துள்ளன.

அதேபோன்று 2014ஆம் ஆண்டு வட மாகாண சபைக்கு 20,426 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும், துரதிஸ்டவசமாக இவ்வருடம் ஒக்ரோபர் மாதம்வரை ஒதுக்கப்பட்ட தொகையில் 25 சதவீதத்துக்கும் குறைவான அளவு நிதியே செலவு செய்யப்பட்டிருக்கின்றது. இது மிகவும் கவலைக்குரியது.

தங்களுக்கு அரசாங்கம் பணம் தருவதில்லை. என்று அடிக்கடி பத்திரிகைகள் வாயிலாகவும் மேடைகளிலும் கூட்டமைப்பினர் முழங்குகின்றார்கள். PSDG என்று சொல்லப்படும் நிதி ஒதுக்கீட்டில், முதலமைச்சருக்குக் கீழுள்ள அமைச்சுக்களுக்கு 179 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இதில் 18.38 மில்லியன் ரூபாய் மட்டுமே, இவ்வருடம் ஒக்ரோபர் மாதம்வரை செலவு செய்யப்பட்டிருக்கின்றது. இதனைவிட, தங்களுடைய வாகனக் கொள்வனவுக்கென இன்னுமொரு தொகையைச் செலவு செய்திருக்கின்றார்கள். அடுத்து, முக்கியமாக வட மாகாண கல்வி அமைச்சுக்கு 277.50 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 55.86 மில்லியன் ரூபாய்தான் இதுவரை செலவு செய்யப்பட்டிருக்கின்றது.

அதேநேரத்தில் சுகாதாரத்துக்கு 238 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால், இதுவரை 86 மில்லியன் ரூபாவைத்தான் இவர்கள் செலவு செய்திருக்கின்றார்கள். கடற்றொழில் அமைச்சுக்கு 81 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டும் 7 மில்லியன் ரூபாய்தான் இதுவரை செலவு செய்யப்பட்டிருக்கின்றது.

விவசாய அமைச்சுக்கு 1,035 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்கீழ் விவசாயம், animal products, irrigation ஆகிய விடயங்கள் எல்லாம் வரும். ஆனால், இவர்கள் 301 மில்லியன் ரூபாய்தான் இதுவரை செலவு செய்திருக்கின்றார்கள். பாருங்கள்! மக்களின் மேம்பாட்டுக்காக நிதிகளை அரசாங்கம் வழங்குகின்றது. ஆனால், அந்த மக்களின் மேம்பாட்டுக்காக அதனைச் செலவு செய்யாமல் மேடைகளில் முழங்குவதில் மட்டும் தான் இவர்கள் அக்கறையாக இருக்கின்றார்கள்.

இந்த அரசாங்கம் 2015ஆம் ஆண்டுக்காக வடக்கு மாகாண சபைக்கு கிட்டத்தட்ட 21,670 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றது. இதைவிட விசேடமாக கைதடியில் அமைந்துள்ள மாகாண சபைக் கட்டடத்துக்கு 104 மில்லியன் ரூபாவை மேலதிகமாக இந்த ஆண்டு அதாவது சென்ற வாரம் நிதி அமைச்சு அனுப்பியிருக்கின்றது. அதைவிட, மாகாண சபை உறுப்பினர்களுக்கு நவீன வசதிகள் செய்து கொடுப்பதற்காக இந்த வருடம் 150 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, இவர்கள் இது ஒன்றையும் செலவழிக்காமல் தொடர்ந்தும் அரசைக் குறைகூறுவது எந்த வகையில் நியாயம்என அவர் கேள்வியெழுப்பி உள்ளார்.



மட்டக்களப்பு, ஏறாவூர்- சவுக்கடி கடலில் கே.எல் ஜவாஹிர் என்பவரது கரை வலையில், பெரும் எண்ணிக்கையிலான கருக்குப் பாரை ரக மீன்கள், வெள்ளிக்கிழமை பிடிபட்டுள்ளன.

சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்கள் பிடிபட்டுள்ளதாகவும் ஒவ்வொரு மீனும் தலா 7 கிலோகிராம் நிறையுடையது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# டெங்கு நோய்த் தாக்கம் நேற்றும் நால்வர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் நேற்றும் நான்கு டெங்கு நோயாளர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கல்வியன் காட்டுப்பகுதியில் இருந்து ஒருவரும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொக்குவில் பகுதியில் இருந்து ஒருவரும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் குருநகர்ப்பகுதியில் இருந்து ஒருவரும் மேலும் கிளிநொச்சியில் இருந்து ஒருவருமாக நான்கு பேர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்நோய்த்தாக்கம் காரணமாக கடந்த மாதம் 110 பேர் இவ் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# புலிகள் முன் மண்டியிடுவதா? பேச்சிற்கே இடமில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

பயங்கரவாதத்திற்கு உயிரூட்டும் வகையில் ஐரோப்பாவில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்டாலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் முன்னிலையில் மண்டியிடப்போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

'நமக்காக நாம்' இராணுவ வீடமைப்புத் திட்டத்தின்கீழ் புத்தளம் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகளை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கும் வகையில் நேற்று பிற்பகல் ஆனமடுவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

சுமார் மூன்று தசாப்தங்களாக இலங்கையில் இருந்த பயங்கரவாதம் வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் வெளிநாடுகளில் இன்னும் அதன் நிழல் செயற்படுவதாக ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் தாய்நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாக இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

### மேலதிக...

வாக்குகளும், எதிராக 57 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்படி இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு 100 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு நடைபெறும் நேரத்தில் ஜாதிக ஹெல உறுமய சபையில் இருக்கவில்லை.

### மண்ணுள்...

எதிர் கொண்டுள்ளதாக பட்டியலிடப்பட்டுள்ளது.

இயற்கைக் காரணிகள் மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக இந்த ஆபத்து ஏற்பட்டிருப்பதாக தேசிய கட்டுமாண ஆய்வு நிறுவனம் தனது எச்சரிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### ஜனாதிபதியின்...

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஸவுடன் கலந்தாலோசனை செய்ததன் பின்னர் ஜனாதிபதி கிறிஸ் நோனீஸை தமது ஆலோசகராக நியமிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், கிறிஸ் நோனீஸிற்கு எதிராக வெளிவிவகார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நோனீஸிற்கு எதிரான பல முறைப்பாடுகளை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் செனுகா செனவிரட்னவே முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஐரோ...

துக்கு முன் வைக்கவேண்டும். அதன்பின்பே எமது வாதங்கள், ஆதாரங்களை முன் வைக்கலாம்.

ஆனால், வெளிநாட்டு நீதிமன்றம் ஒன்றின் முன்பாக எமது நாட்டை அடிபணியவைக்க நாம் தயாரில்லை. எமது நாட்டின் இறைமை, சுயவிருப்பம், கௌரவத்தை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் முன்பாக அடிபணிய வைக்கமாட்டோம். அவ்வாறு நாம் செய்வோமாக இருந்தால் அது எமது நாட்டுக்குப் பெரும் பாதகமாக அமைந்துவிடும். இந்த வழக்கில் நாம் ஒரு தரப்பாக இல்லாவிட்டாலும் இதில் பிரதிவாதிகளாக குறிக்கப்பட்டுள்ள 28 நாடுகளின் தூதுவர்களையும் இலங்கையில் சந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சட்ட அதிகாரங்கள் தேவை

## வலியுறுத்துகிறது ஐ.நா. மனித உரிமைப் பேரவை

(கொழும்பு)

காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு போதியளவு சட்ட அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அண்மையில் இலங்கை தொடர்பான கால மீளாய்வு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையில், காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு உரிய அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

விசாரணைகளை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான மனித, தொழில் நுட்ப மற்றும் நிதி வளங்கள் உரிய வகையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென அது வலியுறுத்தி உள்ளது.

பலவந்தமான கடத்தல்கள் காணாமல் போனவர்கள் தொடர்பில் துரித கதியில் விசாரணை நடாத்தி, குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவித்துள்ளது.

சுயாதீன பொறி முறைமை ஒன்றின் மூலம் விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என தெரிவித்துள்ளது

# பதுளை மண் சரிவில் 38 பேரே உயிரிழப்பு

## அதிகாரிகள் தெரிவிப்பு



(கொழும்பு)

பதுளை மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் இறந்தவர்கள் அல்லது காணாமற்போனவர்களின் மொத்த எண்ணிக்கையை இலங்கை அதிகாரிகள் 38 என தெரிவித்துள்ளனர்

தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் நிலச்சரிவில் அகப்பட்ட நிலையில், அதில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் தம்மிடம் தற்போது இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிலச்சரிவு ஏற்பட்டு நான்கு நாட்கள் ஆகும் சூழ்நிலையில், தற்போது மீட்புப் பணிகளில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவற்றுக்கு பொறுப்பான இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் மனோ பெரேரா பிபிசி தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் புதையுண்ட பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார். நிலச்சரிவுக்கு பின்னர் இதுவரை மொத்தத்தில் ஆறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சகதியையும், இடிபாடுகளையும் அகற்றி மோப்ப நாய்களின் உதவியுடன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் மீட்புப் பணிகள் கடுமையான மழை, மோசமான காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பலர் தமது குடும்பங்களை மொத்தமாக இழந்திருக்கிறார்கள். பல குழந்தைகள் அனாதைகளாகியிருக்கும் நிலையில், அவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

# நீர்வேலி மீனாட்சி அம்மனில் பணம் நகைகள் திருட்டு

நீர்வேலி மாசுவன் சந்திக்கு அருகில் அமைந்துள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தில் பெறுமதி வாய்ந்த பொருட்கள் மற்றும் பணம் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளன.

சுமார் 3 லட்சம் பெறுமதியான பொருட்கள் திருட்டுபோயுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இயந்திர தகடுகள், நகைகள் மற்றும் பணம் என்பன திருட்டுப்போயுள்ளன. திருட்டு தொடர்பாக கோப்பாய் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

# மீளவும் தாக்குதலுக்கு இலக்கான அமைச்சர் மேர்வின் சில்வா மகன்



அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா மீளவும் தாக்குதலுக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கொள்ளுபிட்டியில் உள்ள இரவு விடுதியொன்றில் இடம்பெற்ற மோதலின் போதே இவர் தாக்கப்பட்டார் எனத் தெரியவருகின்றது.

அதிகாலை 3 மணியளவில் ஸ்கொட்லாந்து பிரஜை ஒருவருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை தொடர்ந்தே இவர் தாக்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்ட மாலகவை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாலக சில்வா முன்னரும் பல தடவைகள் இவ்வாறு இரவு நேர விடுதிகளில் மோதலில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது எனினும் சமீபத்தில் இரவுநேர விடுதிகளுக்கு செல்வதை நிறுத்திவிட்டார் எனவும், தேசிய அரசியலில் ஈடுபடப்போ கிறார் எனவும் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்து

# பொருளியல் டிப்ளோமா பாடநெறி கோரப்படுகிறது விண்ணப்பம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் பொருளியல் கற்பித்தல் டிப்ளோமா சான்றிதழ் பாடநெறிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.

இதற்கமைய 6 மாதங்களைக் கொண்ட குறித்த பாடநெறிக்கான விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 28ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் பொருளியல் கற்பித்தல் டிப்ளோமா 2015 ஆம் ஆண்டிற்கான பாடநெறி ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறித்த பாடநெறி க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கான பொருளியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் மற்றும் ஏனைய வர்த்தகத் துறையில் ஆர்வம் கொண்டோருக்காக நடத்தப்படுகிறது.

சுமார் 6 மாதங்களை கொண்ட இப்பாட நெறிக்கு பல்கலைக்கழக பொருளியல் பட்டதாரிகளும் விண்ணப்பிக்க முடியும்.

இந்த பாடநெறிக்கான விண்ணப்பங்களை நவம்பர் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பு கொழும்பு - 3, கொழும்பு பல்கலைக கழகம் தபால் பெட்டி இலக்கம் 1490, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றனர்.

விண்ணப்பதாரிகள் தமது தபால் அட்டையில் 2015 ஆம் ஆண்டு பொருளியல் டிப்ளோமா கற்பித்தல்நெறி என்று குறிப்பிடுமாறும் கோரப்படுகிறது. இது தொடர்பாக மேலதிக தகவல்களுக்கு 011-2582666 என்ற தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலை தடுக்க பேச்சு நடத்தவுள்ள ஜே.வி.பி.

அரசாங்கம் எதிர்வரும் ஜனவரிமாதம் நடத்த திட்டமிட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலை நடத்தாது தடுத்து நிறுத்துவதற்காக ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெறும் நோக்கில் ஜே.வி.பி. அரசியல் கட்சிகளுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற எதிர்க்கட்சிகளுடன் மாத்திரமல்லாது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மற்றும் இடதுசாரி கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அடுத்த வாரத்திற்குள் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது

# கணித பாட அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கு விசேட திட்டம்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் கணித பாடத்தில் சித்தியடையும் மட்டத்தை அதிகரிப்பதற்கான விசேட ஆலோசனைக் குழு ஒன்றை நியமித்திருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பரிந்துரைக்கு ஏற்றவாறு நாட்டின் கல்வித்துறையை விருத்தி செய்வதற்கும் மாணவர்களின் எதிர்கால நலன் கருதியும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத்தர சாதாரண தரப் பரீட்சைகளின் அண்மைய கால பெறுபேறுகளை பார்ப்போமாயின் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இருந்த போதிலும் கணித பாடத்தில் சித்தியடைய தவறும் மாணவர்களின் எண்ணிக்கைகளும் அதிகரித்துள்ளதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவற்றை கருத்திற் கொண்டே எதிர்காலத்தில் கணித பாடங்களில் மாணவர்களின் சித்தி அடையும் மட்டத்தினை அதிகரிப்பதற்கு பல்கலைக்கழக உபவேந்தர்கள், பட்டதாரி ஆசிரியர்களை கொண்டமைந்த விசேட ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்ள்ளது.

எனவே மாணவர்கள் கணித பாடத்தில் சித்தி அடையும் மட்டத்தை அதிகரிப்பதற்கும் கணித பாடத்தை மாணவர்கள் கற்பதற்கு ஊக்கப்படுத்துவதற்கும் ஆசிரியர்களின் கற்பித்தல் செயன் முறையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள தனியார் மற்றும் அரச பாடசாலைகளின் கணித பாடத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை உள்ளடக்கியே இந்த பரிந்துரை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் இந்த பரிந்துரை அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# தேங்காய் திருடன் விளக்கமறியலில்

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவு பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றில், ஒரு தொகை தேங்காய்களைத் திருடியதாகக் கூறப்படும் சந்தேக நபரை நாளை வரை விளக்கமறி யலில் வைக்குமாறு, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கேப்பாப்பிலவு பிரதேசத்திலுள்ள குறித்த தோட்டத்தில் சந்தேக நபரும் மற்றுமொரு நபரும் சேர்ந்து தேங்காய்களை திருடிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு குறித்த இரு சந்தேக நபர்களும் தேங்காய்களைத் திருடிச் செல்வதை அவதானித்த தோட்டத்தில் பணிபுரியும் முதியவர் ஒருவர் இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர்களில் ஒருவரை கடந்த வியாழக்கிழமை மாலை கைது செய்தனர். மற்றையவர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் தலைமறைவாகியுள்ள இரண்டாவது சந்தேக நபரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட முதலாவது சந்தேக நபரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் முன்னிலையில ஆஜர் படுத்திய போது, அவரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.